# உதயன்

விலை ரூபா 6-00

சுடர்:13வள்ளுவர் ஆண்டு 2029 பங்குனி25 (08-04-1998) புதன்கிழமை UTHAYAN–A Lively National Tamil Daily கதிர்:113


# அவசரகாலச் சட்டத்தை எதிர்க்க தமிழ் எம். பிக்களுக்கு அழைப்பு!

## தமிழ் மக்கள் இன்று வேண்டுவது அதுவே என்கின்றார் அஸ்வர் எம்.பி.

கொழும்பு, ஏப்ரல் 8

**"தமிழ் மக்கள் இன்று எதிர்கொள்ளும் அவல நிலைக்கு எதிர்ப்புத் தெரிவிக்கும் வகையில் தமிழ் எம். பிக்கள் அனைவரும் அவசர காலச் சட்ட நீடிப்புக்கு எதிராக வாக்களிக்க முன்வரவேண்டும். தமிழ் மக்களின் இன்றைய வேண்டுகோள் அதுவேயாகும்."**

**— இவ்வாறு ஐ தே. கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினரான எச்.எம். அஸ்வர் நேற்று நாடாளுமன்றத்தில் தெரிவித்தார்.**

நேற்று அவசர கால நீடிப்புத் தொடர்பான விவாதத்தில் பேசுகையில் அவர் இப்படிக் கூறினார்.

அவர் மேலும் கூறியதாவது:

கொழும்பில் தமிழ்ப்பெண்கள் இரவு உடைகளுடன் கைது செய்யப்பட்டு படம் எடுக்கப்படுகின்றனர். தமிழ் இளைஞர் சினிமா, பூங்கா, காலிமுகத்திடல் என்று எங்கும் போக முடியாது. அவர்கள் விரக்தி நிலைக்குள்ளாகிறார்கள் — என்றார்.

தற்போது நாடாளுமன்றத்தில் அங்கம் வகிக்கும் தமிழ்க் கட்சிகளில் தமிழர் விடுதலைக் கூட்டணியைத் தவிர வேறு எந்தக்கட்சியும்

( 10ஆம் பக்கம் பார்க்க)

## கொழும்பில் தமிழர்கள் கைது குறித்து நாடாளுமன்றில் 21 இல் விவாதம்

கொழும்பு, ஏப். 8

கொழும்பிலும் மற்றும் இடங்களிலும் தமிழ் மக்கள் கைது செய்யப்படுவது தொடர்பாக நாடாளுமன்றத்தில் விவாதம் ஒன்று எதிர்வரும் 21 ஆம் திகதி நடைபெறவிருக்கிறது.

வகைதொகையின்றி, காரணமின்றி தமிழர்கள் கைது செய்யப்படுதல், தடுத்துவைக்கப்படல், சித்திரவதைக்குள்ளாக்கப்படல் ஆகியவற்றை நிறுத்தவேண்டும் என்றும் —

இதுதொடர்பாக நாடாளுமன்றத்தில் ஒத்திவைப்பு வேளையில் விவாதம் ஒன்றை நடத்த அனுமதிக்கவேண்டும் என்றும்—

தமிழர் விடுதலைக் கூட்டணியின் நாடாளுமன்றக் குழுத் தலைவரும், மட்டக்களப்பு நாடாளுமன்ற உறுப்பினருமான ஜோசப் பரராஜசிங்கம் சபாநாயகரிடம் நேற்று முன்தினம் சமர்பித்த கடிதம் ஒன்றில் கேட்டிருந்தார்.

இது தொடர்பான விவாதம் எதிர்வரும் 21 ஆம் திகதி நடத்தப்படும் என்று சபாநாயகர் நேற்று ஜோசப் பரராஜசிங்கத்துக்கு அறிவித்துள்ளார்.

(உ-3)

## பகிஷ்கரிப்பின் பின் ஐ. தே. கட்சி நேற்று நாடாளுமன்றுக்கு வந்தது

### மீண்டும் தொடரலாம் என ரணில் எச்சரிக்கை

கொழும்பு, ஏப். 8

ஜனநாயக வழிமுறைகளை அரசாங்கம் தொடர்ந்தும் புறக்கணித்தால் நாடாளுமன்றத்திலும், வெளியிலும் எமது பகிஷ்கரிப்பு நடவடிக்கைகளை தொடர்ந்தும் மேற்கொள்ள நேரிடும்''

— இவ்வாறு எதிர்க்கட்சித் தலைவர் ரணில் விக்கிரமசிங்க நேற்று நாடாளுமன்றத்தில் அறிவித்தார்.

நாடாளுமன்றத்தை பகிஷ்கரிக்கும் தமது செயற்பாட்டைக் கைவிட்டு நேற்று நாடாளுமன்றத்திற்கு முதல் தடவையாக ஐ. தே. கவினர் சமுகமளித்தனர். அங்கு அக்கட்சியின் தலைவர் ரணில் விக்கிரமசிங்க அறிக்கை ஒன்றை வெளியிட்டு உரையாற்றினார்.

'ஜனநாயக வழிமுறைகளை அரசாங்கம் புறக்கணித்ததால்தான் நாடாளுமன்றத்தைப் பகிஷ்கரித்தோம். பொதுக்கூட்டங்கள் நடத்த, ஊர்வலங்கள் செல்ல, சுதந்திரமாகச் செயற்பட இட

(10 ஆம் பக்கம் பார்க்க)

## கைதுகள் குறித்து மேலதிகமாக விவரங்களைப் பெற கருமபீடம்

### தொலைபேசி மூலம் தொடர்பு கொள்ளலாம்

யாழ்ப்பாணம், ஏப். 8

ஆள்கள் கைதாகும்போது அது குறித்து விசாரித்து தகவல் அறிய விரும்புவோருக்கு வசதியாக யாழ். பாதுகாப்பு படையணியின் தலைமையகத்தில் 24 மணி நேரமும் இயங்கும் விசேட தொலைபேசி இணைப்பு ஒன்று ஏற்படுத்தப்பட்டிருப்பதாக படையினர் தரப்பு வெளியிட்ட செய்திக் குறிப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இந்தத் தொலைபேசியின் இலக்கம் 070 – 212200

கைதாகி உள்ள தமது உறவினர் பற்றிய தகவலை அறிந்து கொள்ள விரும்பும் பொதுமக்கள் கைதானவரின் பெயர் விலாசம் மற்றும் தேவையான தகவல்களை தொலைபேசியில் தெரிவிக்கலாம்.

(10 ஆம் பக்கம் பார்க்க)

## "வெற்றி உறுதி"யில் படைக்கு வெற்றி உறுதி!

### சபையில் ரத்வத்தை சூளுரை

கொழும்பு, ஏப். 8

'' வவுனியாவில் இருந்து ஆரம்பிக்கப்பட்ட 'வெற்றி உறுதி' நடவடிக்கையில் வெற்றி கண்டே தீருவோம்''

— இவ்வாறு பிரதிப் பாதுகாப்பு அமைச்சர் ஜெனரல் அனுருத்த ரத்வத்தை தெரிவித்தார்.

அவசர காலச் சட்டத்தை மேலும் ஒரு மாத காலத்துக்கு நீடிக்கும் பிரேரணை மீதான விவாதத்தில் பேசுகையிலேயே அவர் இப்படிக் கூறினார்.

'' வெற்றி உறுதி '' இராணுவ நடவடிக்கை அதன் இலக்குகளை வெற்றிகரமாக நிறைவேற்றி வருகிறது.

படை வீரர்களின் அர்ப்பணிப்பு மிக்க போராட்டத்தினால் இலக்குகள் முழுமையாக எய்தப்படும் — என்றும் அவர் உறுதி படக் கூறினார்.

## அவசரகாலச் சட்டம் மேலும் நீடிக்கப்பட்டது

அவசரகாலச் சட்டத்தை மேலும் ஒரு மாதம் நீடிப்பதற்கான பிரேரணை நேற்றுப் பிற்பகல் நாடாளுமன்றத்தில் 27 அதிகப்படியான வாக்குகளினால் நிறைவேற்றப்பட்டது.

பிரேரணைக்கு ஆதரவாக 103 அங்கத்தவர்களும், எதிராக 76 அங்கத்தவர்களும் வாக்களித்தனர்.

ஈ. பி. டி. பி., இலங்கைத் தொழிலாளர் காங்கிரஸ் ஆகியவற்றின் உறுப்பினர்கள் அரசாங்க உறுப்பினர்களோடு சேர்ந்து ஆதரவாக வாக்களித்தனர்.

ஐ.தே.கட்சி. தமிழர் விடுதலைக் கூட்டணி, இலங்கை முற்போக்கு முன்னணி ஆகியவற்றின் அங்கத்தவர்கள் எதிராக வாக்களித்தனர்.

புளொட் அங்கத்தவர்கள் வாக்களிப்பு நடைபெற்ற சமயம் சபையில் இருக்கவில்லை.

(உ-8)

### மட்டக்களப்பில்

## புலிகள் பிரதேசத்துக்கு இன்று முதல் மின்சாரம்!

மட்டக்களப்பு, ஏப். 8

மட்டக்களப்பு மாவட்டத்தில் விடுதலைப் புலிகளின் கட்டுப்பாட்டுப் பிரதேசமான கொக்கட்டிச்சோலை, அம்பிலாந்துறை ஆகிய பகுதிகளுக்கு இன்று முதல் மின்சாரம் வழங்கப்படவிருக்கிறது.

இதுவரை காலமும் மின்சாரம் வழங்கப்படாத அந்தப் பிரதேசங்களுக்கு மின்சாரம் வழங்குவது தொடர்பாக விடுதலைப் புலிகள் அமைப்புப் பிரதிநிதிகளுக்கும், தபால், தொலைத்தொடர்பு பிரதி அமைச்சர் ஹிஸ்புல்லாவுக்கும் இடையில் 96ஆம் ஆண்டில் இருந்து

( 10ஆம் பக்கம் பார்க்க)

## விமானப்படை பற்றிய தகவல்கள் கலண்டரில்!

### ஐ.தே.க. எம். பி. குற்றச்சாட்டு

கொழும்பு, ஏப். 8

''விமானப் படையினர் வெளியிட்டுள்ள கலண்டர் ஒன்றில் அரசு விமானங்களின் எண்ணிக்கை, அவற்றின் செயற்பாட்டுத் தன்மை ஆகியன படங்களுடன் விவரிக்கப்பட்டுள்ளன. இவை விடுதலைப் புலிகளுக்கு தகவல்களை வழங்குவதாக அமைந்துள்ளன'' என்று ஐ. தே.க. நாடாளுமன்ற உறுப்பினர் கருணசேன

(10 ஆம் பக்கம் பார்க்க)

## கொட்டாஞ்சேனையில் ரூபா 20 லட்சம் கொள்ளை

கொழும்பு, ஏப். 8

கொட்டாஞ்சேனையில் உள்ள தனியார் வங்கி ஒன்றிலிருந்து நேற்றுக் காலை 10 மணியளவில் பணத்தை எடுத்துக்கொண்டு பாதுகாப்புடன் தமது அலுவலகத்துக்கு வாகனத்தில் திரும்பிக்கொண்டிருந்த ஒருவரை ஆயுதமுனையில் வழிமறித்த இனந்தெரியாத குழு ஒன்று அவரிடமிருந்த இருபது லட்சம் ரூபா பணத்தைக் கொள்ளையடித்துவிட்டுத் தலைமறைவாகியுள்ளது.

(உ-3)

இளைய தலைமுறையின் இதயம் கவரும் இன்றைய நாளிதழ்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அறிவித்தல்

கூலிக்கு நோயாளர்களைப் பராமரிப்பவர்கள் சம் பந்தமான பல முறைப்பாடுகள் வந்துள்ளன. எனவே கடும் நோயாளிகளைப் பராமரிப்பதற்கு கூடிய வரையில் தங்களுடைய உறவினர்களை அமர்த்தும் படி பணிப்பாளர் கேட்டுக் கொள்கின்றார். பணம் கொடுத்து வெளியாரை அமர்த்துவதனால் அவர்களால் நோயாளிகளுக்கு ஏற்படும் இடைஞ்சல்களுக்கு வைத்தியசாலை நிர்வாகம் பொறுப்பில்லை என்பதையும் பணிப்பாளர் அறியத் தருகின்றார்.

பணிப்பாளர்,
போதனா வைத்தியசாலை,
யாழ்ப்பாணம்.

( சி/3385 )

# அமரத்துவ அஞ்சலி

யா/கைதடி முத்துக்குமாரசுவாமி மகாவித்தியாலயத்தில் நீண்டகாலம் ஆசிரியராக, உபஅதிபராக, அதிபராகக் கல்விச் சேவைபுரிந்த

அமரர்

## நமசிவாயம் இராமலிங்கம்


அவர்களின் ஆத்மாசாந்தியடைவதாக. பிரிந்து துயருறும் குடும்பத்தாரின் நீங்கா நினைவுகளுள் நாமும் பங்கு கொள்கின்றோம்.

ஆசிரியர் நலன்புரிக்கழகம,
யா/கைதடி முத்துக்குமாரசுவாமி
மகாவித்தியாலயம்.

(54746)

# விண்ணுலக வாழ்வின் 6-ம் ஆண்டு நினைவலைகள்

தோற்றம்: 10 — 5 — 1926



மறைவு: 15 — 3 — 1992

அமரர்

## காசிப்பிள்ளை சபாரத்தினம்

திதி: 08 – 04 – 1998

காலமெல்லாம் எமக்கென வாழ்ந்து
பாசமழை பொழிந்த பப்பாவே!
உங்கள் குரல் கேட்டு ஆறாண்டுகள்
சென்ற போதிலும் எங்கள் குரல் ஓயவில்லையே!

உங்கள் ஆத்மா சாந்தியடையப் பிரார்த்திக்கும்
உங்கள் அன்பின் மனைவி, பிள்ளைகள்,
மருமக்கள், பேரப்பிள்ளை,
உறவினர்கள், நண்பர்கள்.

சுன்னாகம் தெற்கு,
சுன்னாகம்.

(சி- 3311)

# திருட முற்பட்டவர் சிக்கினார்

யாழ்ப்பாணம். ஏப். 8

திருநெல்வேலி, பரமேஸ்வராச் சந்திக்கு அருகில் உள்ள கடை ஒன்றில் இரவு வேளை திருட முற்பட்ட ஒருவர் படையினரால் கைது செய்யப்பட்டார்.

கைது செய்யப்பட்ட மேற்படி நபர் மறுநாள் ''நான் ஒரு திருடன்'' என்ற பலகையை கழுத்தில் தொங்க விட்டவாறு பரல் ஒன்றில் மேல் நிற்க வைக்கப்பட்டிருந்தார் என தெரிவிக்கப் படுகின்றது. (இ-9)

# லிபேட்டி தியேட்டர்

அச்சுவேலி.
இன்று மட்டும்
விஜய் - சங்கவி
**ரசிகன்**
வியாழன் மட்டும்
முரளி - கௌசல்யா
**காலமெல்லாம் காதல் வாழ்க**
வெள்ளி மட்டும்
M.G.R. - ஜெயலலிதா
**என் அண்ணன்**
நேரம்:- 10-30, 2-30
தொலை பேசி இல.
070 - 212223

(54347)

யாழ்.
# றீகல் வெண் திரையில்

91, ஸ்ரான்லி வீதி,
யாழ்ப்பாணம்.
25 அடி அகலத் திரையில்
இன்று முதல்
விஜய் - பேபிசாளினி
மணிவண்ணன், சார்லி
நடித்த
**காதலுக்கு மரியாதை**
அடுத்த வெளியீடு!
**பூவே உனக்காக**
தினசரி:- 10-30, 2-30
தொ.பே.இ. 021 - 2999

(54749)

நெல்லியடி
# மஹாத்மா

வெண் திரையில்
08 04 – 98 முதல்
சூரியா - முரளி
நடித்த
**காதலே நிம்மதி**
காட்சிகள்: 10-30, 2-30
( பழைய நேரம் )

(சி/3357)



உ
சிவமயம்

# கொக்குவில்

## கிருபாகரசிவசுப்பிரமணியசுவாமி கோயில்

(புதுக்கோயில்)

புனராவர்த்தன பிரதிஷ்ட நவகுண்டபக்ஷ

## மகா கும்பாபிஷேக விஞ்ஞாபனம்

வியாழக்கிழமை (09-04-1998) காலை தொடக்கம் மாலை வரை எண்ணெய்க் காப்பு சாத்துதல் நடைபெறும்.

வெள்ளிக்கிழமை (10 - 04 - 1998) காலை 6. 30 மணி தொடக்கம் நண்பகல் 12. 00 மணி வரை கும்பாபிஷேக பூசைகள் நடைபெற்று பின்னர் மகேசுர பூஜையும் இடம்பெறும். மாலை 3. 00 மணிக்கு முருகப்பெருமான் திருவீதியுலா வருவார். அடியார்கள் முருகப்பெருமானின் திருவருளைப் பெற்றுய்யுமாறு வேண்டுகிறோம்.

- பரிபாலனசபை

(சி/3389)

உ

யாழ். நீராவியடி சிவகுருநாதர் வீதி
அருள்மிகு

## தோப்பு மாணிக்கப்பிள்ளையார் கோயில்

## தேர்த் திருவிழா

08–04–1998

வெள்ளோட்ட விழா: இன்று காலை 9-00 மணி.
தேர்த் திருவிழா: காலை 10-00 மணி.
தேர் நிர்மாணம்:

திரு. நா. சின்னத்தம்பி
செல்வன் சி. ஜெகபிரகாஸ்

- ஆலய தொண்டர்கள்

சிவகுருநாதர் வீதி,
யாழ்ப்பாணம்.

(54750)

# மரண அறிவித்தல்கள்

## நமசிவாயம் இராமலிங்கம்

(ஓய்வுபெற்ற உபஅதிபர், யாழ்.கை.மு.கு.சு. ம.வி.கைதடி)

கோயிலாக்கண்டியைப் பிறப்பிடமாகவும், கைதடி மத்தியை வசிப்பிடமாகவும் கொண்ட ந. இராமலிங்கம் (ஓய்வுபெற்ற உப அதிபர்) 04-04-1998 ஆம் திகதி சனிக்கிழமை பின் இரவு சிவபதம் அடைந்தார்.

அன்னார் காலஞ்சென்ற நமசிவாயத்தின் சிரேஷ்ட புத்திரரும், உருத்திரேஸ்வரியின் அன்புக் கணவரும், சமரசேகரம், பரராஜசேகரம் (R. D. O., பிரதேச செயலகம், சாவகச்சேரி), சிவானந்தகுமாரி, ஜெயராஜசேகரம், தனபாலசேகரம் (பிரான்ஸ்), தனரஞ்சிதகுமாரி (லண்டன்), இராஜசேகரம் (பிரான்ஸ்), புஸ்பராணி, சகிதேவி (லண்டன), கௌரி ஆகியோரின் அன்புத் தகப்பனாரும், இந்திரனின் (லண்டன்) மாமனாரும், பவப்பிரசாந்தின (லண்டன்) அன்புப் பேரனுமாவார்.

அன்னாரின் இறுதிக் கிரியைகள் இன்று(08-04-98) புதன்கிழமை காலை 10.00 மணியளவில் அவரின் இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் கைதடி வடக்கு ஊற்றல் இந்து மயானத்தில் தகனம் செய்யப்படும்.

இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக் கொள்கிறேன்.

தகவல்:
இ. பரராஜசேகரம்
(மகன்)

கைதடி மத்தி,
கைதடி,

(54739)

திருமதி

## தெய்வானைப்பிள்ளை தாமோதரம்பிள்ளை

உசன், மிருசுவிலைச் சேர்ந்த காலஞ்சென்ற தாமோதரம்பிள்ளை (ஆசிரியர்) அவர்களின் அன்பு மனைவி திருமதி தெய்வானைப்பிள்ளை 05-04-98 அன்று மன்னாரில் காலமானார்.

இவர் சிவகுருநாதன் (லண்டன்), சிவயோகநாதன் (ஆசிரியர்-வரணி ம. வி), சிவரஞ்சினி, சிவசாந்தினி (ஆசிரியை-புனிதமேரிமகா வித்தியாலயம்-பேசாலை), ஆகியோரின் அன்புத்தாயாரும், லோகேஸ்வரி (லண்டன்), பாரதி (ஆசிரியை-கொடிகாமம் - திருநாவுக்கரசு ம. வி.) மகேஸ்வரன், விமலதர்ஷன் ஆகியோரின் அன்பு மாமியாரும், பவானி, மயூரி, உமேஷ் ஆகியோரின் பேர்த்தியுமாவார்.

இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
தா. சிவயோகநாதன்
(மகன்)

உசன்,
மிருசுவில்.

(54745)


SALE SALE

இதோ!

மலரும் புத்தாண்டை முன்னிட்டு

**மகாநதி** யின் மாபெரும் சிறப்புத் தள்ளுபடி

10% முதல் 30% வரையிலான சிறப்புத் தள்ளுபடி

இத்தள்ளுபடி 08 - 04 - 98 முதல் 14 - 04 - 98 வரைக்குமே!

நதிகளின் சங்கமம் கடலில்; சகலவித புடைவைகளின் சங்கமம்
மகாநதியில்
ஆம்

மலரும் புத்தாண்டை முன்னிட்டு இந்தியா, பாங்கொக் ஆகிய நாடுகளில் இருந்து பிரத்தியேகமாக வரவழைக்கப்பட்ட சிறியோர் முதல் பெரியோர் வரை இருபாலாருக்குமான ஆடைகளை கண்கவர் வர்ணங்களில் தெரிவு செய்ய

**மகாநதி புடைவை அகம்**

[ பட்டுப் புடைவைகளுக்கு கைராசியான நிறுவனம் ]

16, நவீனசந்தை,
யாழ்ப்பாணம்.

4, நவீனசந்தை,
சாவகச்சேரி.

[சி/3375]


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



அரியாலை நீர்நொச்சித் தாழ்வு

ஸ்ரீ சித்தி விநாயகர் ஆலயத்துடன் அமைந்திருக்கும்

# ஸ்ரீ தியாகேசப் பெருமான் (சிவன்) ஆலயத்துக்கான சித்திரத்தேர்வெள்ளோட்ட விழாமலர்



08 — 04 — 1998

## பிரதம குரு அருளாசி

முப்புரத்து அசுரர்களை அழிக்கும் பொருட்டு சிவபெருமான் பணிக்க விஸ்வப் பிரமா இருஷியால் அமைக்கப்பட்ட தேரில் எழுந்தருளி அசுரர்களை அழித்தார். அரியாலை சிவன் கோயில் தேர்த் திருவிழாச் செய்கின்ற விஸ்வப்பிரம்ம கோத்திரத்தில் உதித்தவர்களினால் தனக்கொரு சித்திரத் தேர் வேண்டுமென அருளினார். அவர்களும் சிரமேற் கொண்டு இராஜராஜேஸ்வரி சமேத தியாகராஜருக்கு ஓர் அழகிய சித்திரத் தேரை அமைத்துள்ளனர். இன்று புதன் கிழமை காலை நடைபெறும்

(4 ஆம் பக்கம் பார்க்க)

## சிவத்தமிழ்ச்செல்வி ஆசி

அரியாலை சிவன்கோயில் தேர்த்திருப் பணி சீருடனும் சிறப்புடனும் நிறைவேறி யமை மகிழ்ச்சிக்குரிய நிகழ்ச்சி ஆகும். புதிய சித்திரத்தேரின் வெள்ளோட்டம் இன்று (08 - 04 - 98 இல்) நடைபெறுவது குறித்து எனது வாழ்த்தைத் தெரிவிக்கின்றேன். சிவன்கோயில் திருப்பணி நிறைவேற்றுகைள வதில் சிரமங்கள் பல ஏற்படுவது இயல்பு, இவற்றை எல்லாம் தாண்டி சிறந்த முறையில் சித்திரத்தேரை உருவாக்கியபெருமை இவ்வாலயத் தேர்த் திருப்பணிச்சபையினருக்குண்டு, ஆலயங்களில் நடைபெறும்

(4 ஆம் பக்கம் பார்க்க)

## பரிபாலன சபைத் தலைவரின் பாராட்டுச் செய்தி

அரியாலையில் எழுந்தருளி அனைவருக்கும் அருள்பாலிக்கும் பார்வதி சமேத பரமேஸ்வரப் பெருமானுக்குச் சித்திரத் தேர் கலைத்திறன் பிரகாசிக்க மிக நுட்பமாக உருவாக்கப்பட்டமையை நினைத்து பெருமகிழ்ச்கி அடைகின்றேன். இவ்வருங் கலை வடிவத்தின் உருவாக்கத்திற்கு உழைத்தோர் அனைவரையும் பாராட்டுகின்றேன். ஆலயத்தின் திருவருட் சிறப்பினை

(4 ஆம் பக்கம் பார்க்க)

## நன்றிகள் உரித்தாகுக!

''எம்கடன் பணி செய்து கிடப்பதே'' என்ற திருவாக்கிற்கு அமைய இன்று நீண்ட காலத் திருப்பணியொன்று நிறைவேறுகின்றது. பாரிய இடப்பெயர்வின் போது, போராட்டம் நடைபெற்ற இடத்தில் தேரின் உருவமைப்பில் முக்காற் பகுதி வேலை முடிவடைந்த நிலையில் எம்மால்

(4 ஆம் பக்கம் பார்க்க்)

## பிரதம சிற்பாசாரியார்கள் வழங்கும் சிறப்புச் செய்தி

எல்லாம்வல்ல அரியாலை ஸ்ரீதியாகேசப் பெருமானுக்கு எமது தலைமையில் சித்திரத் தேர் வடிவமைக்கப்பட்டு இன்று அதன் வெள்ளோட்டவிழா சிறப்பாக நடைபெறுவதையிட்டு நாம் பெருமகிழ்ச்சியடைகின்றோம். ஆலயங்களில் நடைபெறும் பஞ்ச கிருத்தியங்களில் உற்சவகாலத்தில் நடை

(4 ஆம் பக்கம் பார்க்க)

## தேர்என்னும்தெய்வஊர்தி

ஆலயங்களில் நித்திய பூஜைகள் நிகழ்த்துகையில் எதிர்பாரத ஊறுகள்(உலோபங்கள்) தவிர்க்கவியலாத வகையில் நேர்வதுண்டு. இவற்றை நிவர்த்தி செய்வதற்கு ஆண்டுதோறும் நைமித்திய பூசைகள் என்னும் பெருவிழாக்கள் நிகழ்த்தப் படுகின்றன.

பரம்பொருளாகிய இறைவன், ஆன்மாக்களை மும்மல உபாதைகளினின்றும் விடுவித்து வீடுபேறளிக்கக் கொண்ட பேரருளினால் இயற்றியருளும் படைத்தல் முதலாம் ஐந்தொழில்களுக்கும் குறியீடுகளாகக் கொடியேற்றம், வாகனத் திருவிழாக்கள், இரதோற்சவம், மௌன உற்சவம், தீர்த்தம் என்பன மகோற்சவத்தில் இடம் பெறுகின்றன, இவற்றுள் அழித்தலுக்குக் குறியீடாய் அமைவதே இரதோற்சவம் என்னும் தேர்த் திருவிழா.

பல பிறவிகள் எடுத்துப் பிரபஞ்சச் சேற்றில் அழுந்தி, அல்லற்படும் ஆன்மாக்களுக்குச் சிறிது காலம் ஓய்வளிப்பதே அழித்தலின் நோக்கமாதலால், அதனைப் புலப்படுத்தும் தேர்த்திருவிழாவும் மகோற்சவங்களில் முக்கிய இடம் பெறுகின்றது.

சிவபெருமான் திரிபுரங்களை அழித்தற்பொருட்டு அமைத்துக் கொண்டருளிய தேரினையும், அதில் அவர் ஊர்ந்து சென்றருளியதையும் நினைவூட்டுவதாயும் தேர்த் திருவிழாஅமைகின்றது. 'முப்புரம் என்பது மும்மல காரியம்' என்பது திருமூலர் திருவாக்கு.

அண்டம், பிண்டம் ஆகிய இரண்டினையும் விளக்குவதாய் அமையும் தேரிலே அச்சு, சக்கரம், கொடிஞ்சி (தேர்மொட்டு) ஆசனம், தட்டுக்கள், விதானம், கலன்கள், முளைகள், மணிகள், படிகள், கொடிகள் முதலாய் அமைந்துள்ள உறுப்புகள் பெரிய தத்துவங்களை உள்ளடக்கியவை. விரிக்கிற் பெருகும் சுருங்கச் சொன்னால் பிரபஞ்சத்திலுள்ள யாவற்றையும் தன்னுள் அடக்கியதும், சிவபெருமான் முப்புரங்களை எரித்தமையைப் புலப்படுத்துவதும் உள்ளடக்கங்களாய்க் கொண்ட இரதமானது எமது பக்தியினையும், இறைதத்துவ உணர்வினையும் வளர்க்கப் பெரிதும் உதவிடும் தெய்வ ஊர்தியாகும்.

தேரின் பிரமாண்டத் தன்மையும் நிலையான உறுதியும், உடலிலுள்ள ஆறு ஆதாரங்களினதும் வழியாய் அவற்றுக்கும் மேலான ஆதாரங்களுக்கு ஆன்மாக்களைச் செலுத்தி, அவை நிரதிசய ஆனந்த சொரூபிகளாய் அசையாமல் நிற்பதனைக் குறிப்பதாயும், சுத்தமாயையாகிய திரோ

(4 ஆம் பக்கம் பார்க்க)

## சொக்கன்



நீர்நொச்சித் தாழ்வினிலே
நிறைந்தவனே சிவனே
தேர்ஏறி வெள்ளோட்டம்
நீவருவாய்— பாரினிலே
துன்பங்கள் துயரங்கள்
நீங்கிடவே என்றும்
நின்னருளை நிறைவுடனே
தா.

— அரியாலையூர்
ஐ. குமரதாசன்.

தேருக்கான வருணப் பூச்சு:-

ரவி (துணிகாசலம்)

சிவன்கோயிலடி, திருநெல்வேலி.

இரும்பு வேலை:-

சுப்பிரமணியம் பரஞ்சோதி

காளிகோயிலடி, திருநெல்வேலி.

## ஆதீன முதல்வர் அருளாசி

சிவனேயச் செல்வர்களே!

அரியாலைப்பதியில் எழுந்தருளியிருந்து அருளாட்சி புரியும் இராஜராஜேஸ்வரி அம்பாள் சமேத ஸ்ரீ தியாகேசப் பெருமானுக்கு சித்திரத்தேர் அமைத்து வெள்ளோட்ட நிகழ்ச்சி நடைபெறுவதையிட்டு பெரும் மகிழ்ச்சியடைகின்றேன். எல்லாம் வல்ல இறைவனுக்கு எடுக்கும் எந்தவொரு நிகழ்ச்சியும் இறைவனுடைய பூரண அருளைத்தரக் கூடியது. கலைகள் மூலமாக இறைவனுடைய அருளை வெளிக் கொணர்வது சமயக் கலைவடிவங்களாகும்.

## ஸ்தபதி ஆ. ஜீவரட்ணம் ஆசி

எல்லாம்வல்ல அரியாலை நீர்நொச்சித் தாழ்வு ஸ்ரீ சித்திவிநாயகர் ஆலயத்திற்கு அண்மையில் அருளாட்சி புரியும் எம்பெருமானுக்கு புதிய அழகிய சித்திரத்தேர் ஒன்று உருவாகியிருப்பது உவகை தருகின்றது.

எமது பாரம்பரிய கலைப்படைப்புகள் யாவும் ஆலயங்களை மையமாக வைத்தே வளர்ச்சியடைந்து வந்துள்ளன. அவ்வகை

(4 ஆம் பக்கம் பார்க்க)

## அபிவிருத்திச் சங்கத் தலைவர் வாழ்த்துச் செய்தி

தமிழும் சைவமும் தழைத்தோங்க அரியாலையூர் மக்கள் பன்னெடுங் காலமாகப் பணியாற்றி வருவது யாவரும் அறிந்ததே. அரியாலை நீர்நொச்சித் தாழ்வுப் பகுதியில் அமைந்துள்ள சிவன் கோயிலுக்கென அரி

(4 ஆம் பக்கம் பார்க்க)

## ஸ்ரீ பார்வதி வித்தியாசாலை அதிபர் வாழ்த்துச் செய்தி

எமது அரியாலை ஊரின் கண்ணே உள்ள நீர்நொச்சித் தாழ்வு என்னும் புண்ணிய தலத்தில் அமைந்துள்ள ஸ்ரீ சித்தி விநாயகர் ஆலயத்துடன் இணைந்து அமைந்துள்ள பார்வதி சமேத பரமசிவன் கோயி

(4 ஆம் பக்கம் பார்க்க)

## இன்பங்கள் கோடி தரும்

நாடு சிறந்திட வீடு விளங்கிட
நன்மையெலாம் பெருகி
கேடுமறைந்தெம் கீழ்நிலை மாறிக்
கேட்டவரம் தரவே
நாடுபவர்க்கருள் நல்கிடும் சிவனார்
தேரினில் ஏறிவரும்
ஈடு இல் காட்சியைக் காண்பவர்
வாழ்வினில் இன்பங்கள் கோடிவரும்
நீர்நொச்சித் தாழ்வினிலே
நின்றருளை நல்கும்
பேர்பெற்ற சித்திவிநா யகரின்
பாங்காய்
சீர்உற்ற சிவன்தேரில் உலவுங் காட்சி
பார்தன்னிற் காண்பார்தம்
பாவம் போமே!

நாயன்மார்கட்டு
— இராசையா குகதாசன்


இன்று நடைபெறும் இச் சித்திரத் தேரின் வெள்ளோட்டம் சிறப்பாக நடைபெறவும்,
இச் சித்திரத்தேரை உருவாக்கியு அனைத்துக் கலைஞர்களையும் பாராட்டுவோர்.

| | | | |
|---|---|---|---|
| துர்க்கா களஞ்சியம்<br>ஸ்ரான்லி வீதி,<br>யாழ்ப்பாணம். | காவேரி சில்க்ஸ்<br>48, பெரியகடை,<br>யாழ்ப்பாணம். | மேகாஸ் வீடியோ<br>தபாற்கட்டைச் சந்தி,<br>அரியாலை. | மனோ களஞ்சியம்<br>கனகரெத்தினம் வீதி,<br>அரியாலை. |
| தர்ம்சன்ஸ்<br>கட்டட ஒப்பந்தக்காரர்<br>கனகரெத்தினம் வீதி,<br>அரியாலை. | அரியாலை<br>மல்ரிறேட் சென்ரர்<br>தபாற்கட்டைச் சந்தி,<br>அரியாலை. | சித்ராஸ்<br>மு[illegible]லி வீதி, அரியாலை.<br>இவர்களுடன்<br>திரு. சி. சரவணபவன் | புஸ்பா வீடியோ சென்ரர்<br>707, நெடுங்குளம் சந்தி,<br>அரியாலை,<br>யாழ்ப்பாணம். |
| அழகக்கோன் களஞ்சியம்<br>ஆனந்தன் வடலி வீதி,<br>அரியாலை. | சத்திய[illegible]<br>நாவலர் வீதி,<br>அரியாலை. | கே. [illegible] கந்தையாபிள்ளை<br>316, ஆஸ்பத்திரி வீதி,<br>யாழ்ப்பாணம். | விளம்பர இலக்கம்:- சி/3384 |

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஸ்ரீ தியாகேசப் பெருமான் சித்திரத்தேர் வெள்ளோட்ட மலர்

(மூன்றாம் பக்கத் தொடர்)

## தேர் என்னும் தெய்வ ஊர்தி....

தான சக்தியின் விரிவினைக் குறிப்பதாயும் கொள்வர்.

பழம்பெருமையும் மகத்துவமும் வாய்ந்த அரியாலை நீர்நொச்சித் தாழ்வில் வீற்றிருந்து அருள்பாலிக்கும் அருள்மிகு சித்தி

### பார்வதி...

லுக்கு சித்திரத்தேர் இதுவரை இல்லாதது பெருங் குறையாக இருந்தது. இக்குறையை நிறைவு செய்யும் இந்நன்னாளிலே இந்தக் சித்தரத் தேரினைக் கட்டுவித்த தேர்த் திருவிழா உபயகாரர்களையும் இத் தேரினைக் கட்டிய யாழ்ப்பாணத்துச் சிற்பாசாரியர் களையும் வாழ்த்துவதோடு இந் நன்னாளிலே தேர் வெள்ளோட்டத்தில் கலந்து இஷ்ட சித்திகளைப் பெறுமாறு சிவனடியார்களை வேண்டிக்கொள்கிறேன்.

''தென்னாடுடைய சிவனே போற்றி-
எந்நாட்டவர்க்கும் இறைவா போற்றி!
இன்பமே சூழ்க - எல்லோரும் வாழ்க''

பொ. நடராசா அதிபர்
யா/அரியாலை ஸ்ரீ பார்வதி வித்தியாசாலை

### நன்றிகள்...

கைவிடப்பட்டுச் சென்ற இச்சித்திரத் தேருக்கு ஒரு சிறிய பாதிப்பும் ஏற்படாமல் இருந்தது எல்லாம் வல்ல அரியாலை ஸ்ரீ தியாகேசப் பெருமானின் அருளாகும்.

இத் திருப்பணியை முன்னின்று நடத்திய பிரதம சிற்பாசாரியார்கள் திரு. சி. செல்லத்துரை, வ.தர்மலிங்கம் உள்ளூர் கலைஞர்களுக்கும், இரும்பு வேலை, வர்ணப் பூச்சு செய்த கலைஞர்களுக்கும், வெளிநாடுகளில் இக்கைங்கரியத்திற்கு நிதியுதவி வழங்கிய பெருமனது படைத்தவர்களுக்கும், ஆலய பரிபாலன சபையினருக்கும், இச் சிறப்பு மலருக்கு ஆசிச்செய்தி, பாராட்டுச் செய்தி, கட்டுரை, கவிதை என்பனவற்றை வழங்கிய அனைத்து அறிஞர் பெருமக்களுக்கும், இச்சிறப்பிதழ் அச்சேற்ற நிதி உதவி செய்த சகல வர்த்தகப் பெருமக்களுக்கும், உதயன் பத்திரிகை நிறுவனத்தாருக்கும் குடும்பத்தினர் சார்பில் பல கோடி நன்றிகள்.

எம் சமயம் வளர யாவரும் துணைநிற்போம்.

த. பஞ்சலிங்கம் — தலைவர்
தேர்த் திருப்பணிச் சபை

த. இலங்கேஸ்வரன்
வெளிநாட்டுத் தொடர்பாளர்

### பரிபாலன சபை...

விளக்கி நிற்கும் மகோற்சவத்தில் இரதோற்சவம் மிக முக்கியமானதும். மேலானதுமாகும். மும்மலங்களை அழித்து மூவகை ஆன்மாக்களையும் தமது திருவடிகளிலே சேர்த்தலாகிய முத்தியைப் பெறச் செய்தலே தேர்த்திருவிழாவின் தத்துவமாகும். பூவுலக வாழ்வையும், தேவருலக வாழ்வையும் வடிவமைத்துக் காட்டும் அற்புதம் நிறைந்த சித்திரத் தேரானது மிகச் சிறப்பாக அமைந்தது நாட்டுக்கும், மக்களுக்கும் மிக மிக உத்தமமான உயர்ந்த சிறப்பும், செல்வமும் ஆகும்.

''தேர்த்திருப்பணி தெய்வீகத்திருப்பணி''

மு. மயில்வாகனம்
(கிராமசேவையாளர்)
ஆலய பரிபாலன சபைத் தலைவர்

### சிவத்தமிழ்...

மகோற்சவகாலம் மிகவும் மகத்துவமான காலமாகும் மகோற்சவங்களில் உயர்ந்தது இரதோற்சவம். இது இறைவனுடைய சங்காரத் தொழிலை உணர்த்தி நிற்பதாகும். தீயனவற்றை அழித்து அசுரசக்திகளைப் போக்கி சைவநீதியை நிலைநாட்டி நிற்கும் தத்துவம் இவ்வுற்சவத்துக்கு உண்டு.

இறைவன் முப்புரங்களை அழித்ததன் மூலம் மும்மலங்களை நீக்கி ஆன்மாவைச் சிவமயமாக்குகின்றான் என்ற உண்மையை இது காட்டுகின்றது. எனவே சைவ சமய அடிப்படையிலே சிறந்த சைவசித்தாந்த உண்மையை ஆலயங்களில் விளங்க வைப்பது மகோற்சவ காலங்களாகும்.

அரியாலை சிவன்கோயிலிலே நடைபெற இருக்கும் சித்திரத்தேர் வெள்ளோட்டத்தில் ஆர்வலர்கள் அனைவரும் கலந்து வடம் பிடித்து உய்வடைவார்களாக.

சிவத்தமிழ்ச்செல்வி
தங்கம்மா அப்பாக்குட்டி
தலைவர்
துர்க்காதேவி தேவஸ்தானம்,
தெல்லிப்பழை.

### பிரதமகுரு...

வெள்ளோட்டத்தையும் கண்டு களிப்புற்று, நாளை மறுதினம் வெள்ளிக்கிழமை காலை சுவாமி தேரில் எழுந்தருளி வீதி வலம்வரும் காட்சியையும் கண்டு தரிசித்து ஆனந்திப்போமாக.

பிரதிஷ்டா வித்வஜோதி, கிரியாரெத்தினம்
பிரம்மஸ்ரீ இ. சுப்பிரமணியக் குருக்கள்
பிரதம குரு,
ஸ்ரீ சித்தி விநாயகர் தேவஸ்தானம்,
அரியாலை,

விநாயகர் ஆலயத்திற்கு இடப்புறத்தே எழுந்தருளியுள்ள ஸ்ரீ தியாகேசப் பெருமானுக்கு, அரியாலை விஸ்வகுலப் பெரு மக்கள் புதிதாகத் தேர் சமைப்பித்து 08-04-98 இன்று வெள்ளோட்ட விழா அமைவது பெரிதும் பாராட்டத்தக்கது.

இச்சித்திரத்தேர், தெல்லிப்பழை வாசரும், விசுவகுல திலகருமான திருமிகு சின்னையா செல்லத்துரைஅவர்களின் தலைமையில், உள்ளூர்க் கலைஞர்களால் திறம்பட அமைக்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கதாகும்.

ஸ்ரீ சித்திவிநாயகர், ஸ்ரீதியா கேசர்
திருவடிகள் சரணம்.

### அபிவிருத்திச்...

யாலையூர் அமரர் பொ. வல்லிபுரம் குடும்பத்தினர் இணைந்து நிர்மாணித்து அன்பளிப்புச் செய்துள்ள சித்திரத்தேரின் வெள்ளோட்டத்திற்கு இச்செய்தியை அரியாலை மக்களின் சார்பாக விடுப்பதில் பெருமகிழ்ச்சி அடைகின்றேன்.

ஆலயங்களில் கொடியேற்றி உற்சவம் செய்தல் இறைவன் பஞ்சகிருத்தியம் மூலம் ஆன்மாக்களுக்கு அருள் செய்து பேரின்பத்தை நல்குவதேயாகும். இப்பஞ்ச கிருத்தியங்களில் ஒன்றான அழித்தலைக் குறிப்பது தேர்த் திருவிழாவாகும். இறைவன் தேரில் எழுந்தருளி பவனி வந்து அருள் பாலித்து ஆன்மாக்களை ஆட்கொள்கின்றான்.

இத்தனை சிறப்பு வாய்ந்த புண்ணிய கைங்கரியத்தில் தங்களையும் பங்காளிகளாக்கி இன்று நடைபெறுகின்ற சித்திரத் தேரின் வெள்ளோட்ட நிகழ்ச்சியில் கலந்து கொள்ளும் அடியார்கள் அனைவரும் இறையருள் கிடைக்கப்பெற்று இன்புற்றிருப்பார்களாக.

''இன்பமே சூழ்க எல்லோரும் வாழ்க''

எஸ். ரி. பத்மநாதன் தலைவர்
அரியாலை அபிவிருத்திச் சங்கம் சார்பாக

### ஸ்தபதி...

யில் தமிழ் மக்களின் தெய்வீகப் பண்புகளை நிலைநிறுத்தும் பண்பாட்டுக் கலைச் சின்னங்களாக சித்திரத்தேர்கள் விளங்குகின்றன.

சிற்பம் ஒரு தெய்வீகக்கலை. நுண்ணறிவும், கற்பனையாற்றலும், அவதானிப்புத் திறனும் ஒருங்கே இணைந்த இக்கலையானது வெறுமனே தொழில் அல்ல.

இந்த அழகிய தேரை நிர்மாணித்த சிற்பக்கலைஞர் சின்னையா செல்லத்துரை அவர்களையும் அவரோடு உடனுழைத்த கலைஞர்களையும் மனதாரப் பாராட்டுவதுடன், அவர் தம் பணி மேலும் தொடர வாழ்த்துகிறேன்.

உலகெலாம் உணர்ந்து ஓதுதற்கரியவனாகிய எம்பெருமான் இச் சித்திரத்தேரில் இவர்ந்து எல்லோர்க்கும் எல்லா நலனும் அருள்பாலிக்க வேண்டுமென்று மனம் மொழி மெய்யால் வேண்டுகின்றேன்.

அன்பன்
ஸ்தபதி. ஆ. ஜீவரட்ணம் ஆச்சாரி
ஆறுமுகம் சிற்பாலயம்
திருநெல்வேலி.

### ஆதீன முதல்வர்...

அவ்வகையில் சித்திரத்தேர் எங்கள் ஆலயங்களில் முக்கியமான ஓர் இடத்தை வகிக்கின்றது. தேரினுடைய அமைப்பு மனிதனுடைய வாழ்க்கைத் தத்துவத்தைப் பூரணமாகக் காட்டுவதாகும். இத்தேரை உருவாக்கித்தந்த சிற்பக்கலைஞரைப் பாராட்டுகின்றோம். இந்தத்தேரை உருவாக்குவதற்கு உழைத்த திருப்பணிச் சபையினரையும் வாழ்த்துகின்றோம். எல்லோருக்கும் பார்வதி பரமேஸ்வரனுடைய திருவருள் பேறு கிடைக்கப் பிரார்த்திக்கின்றோம்.

என்றும் வேண்டும் இன்ப அன்பு
ஸ்ரீலஸ்ரீ சோமசுந்தர பரமாசாரிய
ஸ்வாமிகள்
நல்லை குருமஹா சந்நிதானம்.

### பிரதம...

பெறும் தேர்த்திருவிழா மிகப்போற்றுதலுக்குரியதாகும். தேரின் பாகங்களான இருபதும் சைவசமயத் தத்துவங்களை வெளிப்படுத்துகின்றன. தேரை நிர்மாணித்தல், நிர்மாணிக்க உதவுதல் என்பன ஆன்மஈடேற்றத்திற்கான கைங்கரியங்களாகும்.

இப்பெரும் கைங்காரியத்தைச் செய்து முடித்த அரியாலை விஸ்வப்பிரம்மகுலத் திலகர் அமரர் பொ. வல்லிபுரம் அவர்களின் குடும்பத்தினரைப் பாராட்டுவதோடு, இதனை வடிவமைக்க மனநிறைவோடு இத் திருப்பணியில் ஈடுபட்ட அனைத்து சிற்பக் கலைஞர்களுக்கும் எல்லாம்வல்ல தியாகேசப் பெருமானின் ஆசி கிடைக்க மனமுருகி இறைஞ்சுகின்றோம்.

''வாழ்க பணி, ஓங்குக அவர் திருநாமம்''

அரியாலை தெல்லிப்பழை
வ. தர்மலிங்கம் சி. செல்லத்துரை
பிரதம சிற்பாசாரியர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## வவுனியாவில் இருந்து
# சிகிச்சைக்கு அனுராதபுரம் செல்ல விசேட 'பாஸ்'

வவுனியா, ஏப். 8

வவுனியாவில் இருந்து மேலதிக சிகிச்சைக்காக அனுராதபுரம் செல்வோருக்கும் அவர்களுடன் உதவிக்குச் செல்வோருக்குமென விசேட பாஸ் வழங்கும் திட்டம் ஒன்று நடைமுறைப்படுத்தப்பட உள்ளது.

வவுனியா மாவட்ட பதில் வைத்திய அதிகாரி டாக்டர் கேதீஸ்வரன் இத் தகவலைத் தெரிவித்தார்.

கடுமையான நோய்காரணமாக அனுராதபுரம் வைத்தியசாலைக்கு கொண்டு செல்லப்பட்டு அங்கு மரணமான குழந்தைஒன்றின் சடலத்தை வவுனியாவுக்கு எடுத்து வர பாஸ் வழங்கப்படாததனால் அக் குழந்தையின் சடலம் அநுராதபுரத்திலேயே அடக்கம் செய்யப்பட்டது தெரிந்ததே குழந்தையின் தாயார் மட்டும் வவுனியா திரும்ப அனுமதிக்கப்பட்டார்.

இச் சம்பவம் குறித்து மன்னார் அரச அதிபர் சம்பந்தப்பட்டஅதிகாரிகளின் கவனத்துக்கு கொண்டுவந்ததை அடுத்தே இந்தப் புதிய பாஸ் வழங்கும் திட்டம் அமுல் செய்யப்பட உள்ளது.

இப் புதிய திட்டத்தின் படி மேலதிக சிகிச்சைக்காக வவுனியாவில் இருந்து அநுராத புரம் செல்லும் நோயாளர்களுக்கும் அவர்களது உதவியாளர்களுக்கும் வவுனியா வைத்தியசாலையில் உள்ள பொலீஸார் விசேட பாஸ் ஒன்றினை வழங்குவார்கள்.

இதற்கான ஒழுங்குகள் அனைத்தும் செய்யப்பட்டுள்ளதாக டாக்டர் கேதீஸ்வரன் அறிவித்துள்ளார்.

(இ-9-164)

# சதாவதானி குருபூசை

மேலைப்புலோலி தம்பசெட்டி பெரும்புகழ் சதாவதானி கதிரைவேற்பிள்ளை குருபூசைதின நிகழ்வு மக நட்சத்திரத் தினமான இன்று புதன்கிழமை பிற்பகல் 3-00 மணிக்கு தம்பசெட்டி சதாவதானி கதிரைவேற்பிள்ளை சனசமூக நிலைய மண்டபத்தில் நிலையத்தலைவர் அ. துரைசிங்கம் தலைமையில் நடைபெறும்.

இந்நிகழ்வில் சதாவதானி பற்றி மேலைப்புலோலி முடிக்கொற்றாவத்தை பிரதமகுரு பிரம்மஸ்ரீ வேதாரணியக்குருக்கள் பருத்தித்துறை ஹாட்லிக் கல்லூரி ஆசிரியர் ஆ. சிவநாதன் ஆகியோர் சிறப்புரை நிகழ்த்துவார்கள்.

இந்நிகழ்வில் மேலைப்புலோலிக் கிராமத்தில் இயங்கும் மூன்று பாலர் பாடசாலைகளைச் சேர்ந்த 52 மாணவ மாணவிகளுக்கு சேமிப்புப் பழக்கத்தினை ஊக்குவிக்கும் நல்ல நோக்குடன் சதாவதானி கதிரைவேற்பிள்ளை சிக்கன கடனுதவு கூட்டுறவுச் சங்கத்தினால் தலா 50ரூபா வைப்பிலிடப்பட்ட சேமிப்புப் புத்தகங்களும் வழங்கப்படவுள்ளன.

அத்துடன் சிறுவர் சிறுமிகளின் கலை நிகழ்ச்சிகளும் இடம்பெறவுள்ளதாக நிலையச் செயலாளர் க. இராமச்சந்திரன் தெரிவித்தார்.

(இ-30)

யா/ இராமநாதன் கல்லூரி
சுன்னாகம்
பாடசாலை அபிவிருத்திச் சங்கம்
பொதுக் கூட்டம்
இடம்: கல்லூரிமண்டபம்
நாள்: 9 - 4 - 98 வியாழக்கிழமை
நேரம்: பிற்பகல் 3 00 மணி
பெற்றோர் அனைவரையும் தவறாது சமுகந்தருமாறு அன்புடன் அழைக்கின்றோம்.
செ. இலகுநாதன் அ.நாகராசா
இணைச் செயலாளர்கள்
(சி/3380)

2 ஆம் ஆண்டு நினைவஞ்சலி
திருமதி ஜெகதாம்பாள் மார்க்கண்டேயக் குருக்கள்
தோற்றம்: 1927 - 01 - 05
மறைவு: 1996 - 04 - 01
திதி:- 08 - 04 - 1998
உங்கள் ஆன்மா சாந்தியடைய இறைவனை வேண்டுகின்றோம்.
கணவன்
பிரம்மஸ்ரீ மார்க்கண்டேயக்குருக்கள்
மகள்- ராதா
வட்டுக்கோட்டை தெற்கு,
வட்டுக்கோட்டை.
(54738)

கண்ணீர் அஞ்சலி
எமது கலாசாலையின் முதலாம் வருட கணித நெறி ஆசிரிய மாணவி
செல்வி. த. பொற்செல்வியின் தந்தையார்
அமரர் சு. தம்பையா
(திருநகர், யோகபுரம்)
அமரத்துவமடைந்தமையையிட்டு எமது கண்ணீரைக் காணிக்கையாக்குகின்றோம்.
அதிபர், விரிவுரையாளர்கள்,
ஆசிரிய, மாணவர்கள்,
பலாலி ஆசிரிய கலாசாலை
(54744)

## கேள்விப்பத்திரம் கோரல்

பன்றிக்கோட்டுப் பிள்ளையார் கோயில்
(வண்ணை ஸ்ரீ விஸ்வலிங்க மகா கணபதி கோயில்)

தம்ஸ மண்டபம் அமைத்தல்

தகுதியான கட்டட ஒப்பந்தக்காரர்களிடமிருந்து மேற்படி ஆலயத்தின் தம்ஸ மண்டபம் அமைப்பதற்குரிய கேள்விப் பத்திரங்கள் கோரப்படுகின்றன.

ஆலயக் காரியாலயத்தில் **08 - 04 - 98** தொடக்கம் **15-04-98** வரையான காலப்பகுதியில் காலை 7. 30மணியிலிருந்து மாலை 4. 30மணி வரை கேள்விப் பத்திரத்தைப் பெற்றுக் கொள்வதுடன் தம்ஸ மண்டபத்தின் வரைபடத்தையும் பார்வையிடலாம்.

கேள்விப் பத்திரம் சமர்ப்பிப்பதற்கு மீளப்பெறக் கூடிய ரூபா 1000 உம் மீளப்பெற முடியாத ரூபா 500 உம் ஆக மொத்தம் ரூபா 1500 வழங்கப்பட வேண்டும்.

கேள்விப் பத்திரத்தைப் பூர்த்தி செய்து நேரடியாகவோ அல்லது பதிவுத் தபால் மூலமாகவோ சமர்ப்பிக்க வேண்டிய இறுதிப் தினம் **22 - 04 - 98** காலை 9. 00 மணி ஆகும். அன்றே காலை 10. 00 மணிக்குக் கேள்விப் பத்திரங்கள் திறக்கப்படும்.

தலைவர்
தர்மகர்த்தா சபை

இல. 655, கே. கே. எஸ் வீதி,
யாழ்ப்பாணம்.

(54696)


# பேசாலை - குறிகாட்டுவான் வழியாக
# கப்பல் சேவை நடத்த முயற்சி

யாழ்ப்பாணம், ஏப். 8

மன்னாரில் தங்கியுள்ள அகதிகளை சிறிய கப்பல்கள் மூலம் பேசாலையில் இருந்து குறிகாட்டுவான் துறைக்கு அழைத்துவர முயற்சி மேற்கொள்ளப்பட்டுள்ளது.

அண்மையில் மடுவில் மன்னார் அரச அதிபருடன் யாழ். ஆயர் வந். தோமஸ் சௌந்தரநாயகம் நடத்திய பேச்சுக்களின் போது இந்தச் சேவையை நடத்துவது தொடர்பாக பேசப்பட்டது.

இந்தச் சேவையை மன்னார்— யாழ். அரச அதிபர்கள் இணைந்து நடத்த விடுதலைப் புலிகள் அனுமதி வழங்கியுள்ளதால், இது தொடர்பாக யாழ். அரச அதிபர் மற்றும் இராணுவ அதிகாரிகளுடன் பேசவிருப்பதாக ஆயர் தெரிவித்தார்.

இச்சேவை நடத்தப்படும் பட்சத்தில் மக்கள் சௌகரியமாக யாழ். வந்து சேர முடியும் என சுட்டிக் காட்டப்படுகிறது.

(இ-3)

## விபத்தில் 2 இளைஞர் படுகாயம்

யாழ்ப்பாணம், ஏப். 8

யாழ்ப்பாணம் ஸ்ரான்லி வீதியில் இடம்பெற்ற மோட்டார்சைக்கிள்— வான் விபத்தில் இருவர் படுகாயமடைந்தனர்.

மோட்டார் சைக்கிளில் சென்றவர்களான யாழ்ப்பாணம் நாவலர் வீதியைச் சேர்ந்த வடிவேல் விமலேஸ்வரன் (வயது 20), பி. ஏ. தம்பிலேனைச் சேர்ந்த தேவராசா ஜெய்கிஷன் (வயது25) ஆகிய இருவருமே படுகாயமடைந்தவர்களாவர். இவர்கள் யாழ். ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

(ஐ-15-139)

## யானை தாக்கி மரணம்

வவுனியா, ஏப். 8

புதுக்குடியிருப்புப் பகுதியில் யானையால் தாக்குண்ட நாற்பது வயது குடும்பஸ்தர் ஒருவர் மரணமடைந்துள்ளார்.

புதுக்குடியிருப்பு தேவிபுரம் பகுதியில் ஞாயிறன்று இரவு இச் சம்பவம் இடம் பெற்றுள்ளது.

இரவுவேளை வயலில் மிருகம் ஒன்று பயிர்களை மேய்வதைக்கண்ட மேற்படி நபர் அந்த மிருகத்தை விரட்டுவதற்காகச் சென்றார். அப்போது அங்கு பயிர்களை மேய்ந்து கொண்டிருந்த யானை அந்த நபரைத்தாக்கிக் கொன்றது. (ஐ-164-9)

## கடையில் பொருள்களை திருடியவர் நீதிமன்றில்

யாழ்ப்பாணம், ஏப். 8

திருநெல்வேலி தபாற் பெட்டிச் சந்தியில் உள்ள வியாபாரநிலையம் ஒன்றில் இருந்து 6 ஆயிரத்து எழுநூற்றிஎழுபது ரூபா பெறுமதியான பொருள்களைத் திருடியதாகக் குற்றஞ் சாட்டப்பட்ட நபரொருவர் யாழ். நீதிமன்றில் ஆஜர் செய்யப்பட்டார்.

ஐந்துசந்தி, யாழ்ப்பாணத்தைச் சேர்ந்த நவரட்ணம் பற்குணராஜா என்பவரே நீதிமன்றில் ஆஜர் செய்யப்பட்டவராவார்.

வழக்கை விசாரித்த மல்லாகம் மாவட்ட நீதிமன்ற நீதிவான் மு. திருநாவுக்கரசு மேற்படி சந்தேக நபரை எதிர்வரும் 20 ஆம் திகதி வரை விளக்கமறியலில் வைக்குமாறு உத்தரவிட்டார்.

(ஐ-7)


## பதினொராவது ஆண்டு நினைவலைகள்



மொட்டெனத் தாயின் மடியில்:
17-09-1969

பொட்டெனத் தமிழ் மண்ணில்
08-04-1987

### சற்குணநாதன் நந்தகோபன்

அன்புச் செல்வமே! அருமை மகனே!
அழகொளிரும் திங்களே மகனே!
மன்றாடி நின்றோம் மறந்திட்டான் காலதேவன்
சென்றதே ஆண்டு பதினொன்று
சிலிர்க்குதே எங்கள் நெஞ்சம்
புன்சிரிப்பின் புகலிடமே போனஇடம் சொல்லாயோ?
ஆறாது ஆறாது நெஞ்சம் அழுதாலும் தீராது
துன்பம் வேறாகி மாறாத பந்தம்
எங்கள் விழி நீரே! நந்தகோபன்
என்ற நாமம் மங்கியதோ உன் மஞ்சம்
மகனே மீளாத்துயில் கொண்டு ஆண்டுகள்
பதினொன்றுஓடிமறைந்தாலும் மாறாதுமறையாது
ஒளி வீசும் உன் உருவம்.

உன்பிரிவால் வாடித்துடிக்கும்
அப்பா, அம்மா, அக்காமார், அத்தான்மார்,
தம்பி, தங்கை, மைத்துனியார்,
உறவினர், நண்பர்கள்.

தகவல்:
சி. சற்குணநாதன் (T. A.),
பிருந்தாவனம்,
மீசாலை மேற்கு,
மீசாலை.

(சி/3369)

## வாழ்த்துகின்றோம்

தாவடி இந்துமயான அபிவிருத்திச் சபையின் முன்னாள் தலைவரும், தற்போதைய பொருளாளரும், பிரபல சமூக சேவையாளருமாகிய



உயர்திரு.
**சின்னத்தம்பி செல்லத்துரை**
(பிள்ளையார்)

18-03-1998 இல் மல்லாகம் நீதிபதி உயர்திரு. எம். திருநாவுக்கரசு அவர்களின் முன்னிலையில்

**சமாதான நீதிவானாக**

சத்தியப்பிரமாணம் செய்து பதவி ஏற்றுக் கொண்டார். அவர்களின் சேவைக்குக் கிடைத்த சிறப்புக்கு எங்கள் உளங்கனிந்த வரழ்த்துக்கள்.

தாவடி இந்துமயான அபிவிருத்திச் சபை.

(சி/3371)

முதலாம் தவணைப் பரீட்சை
Poya Day
**11 - 04 - 98** சனி
**2** முதல் **11** வரை
நாடு பூராவும் நடத்தப்படும்.
**BOND**
யாழ். நகர்.
(54725)

## வரும் சித்திரைப் புத்தாண்டை முன்னிட்டு மாபெரும் மலிவு விற்பனை

❖ நங்கையர்க்கேற்ற புதிய சாறி வகைகள் ❖ ஸ்கேட் அன் பிளவுஸ், ❖ கவுண் வகைகள்
❖ சிறுவர்க்கேற்ற பேபிசூட் ❖ ஆடவர்களுக்கேற்ற ரவுசர்கள் ❖ சேட் ❖ ரீ சேட் வகைகளையும்
மற்றும் துணிவகைகள் அனைத்தையும் மலிவு விற்பனையில் பெற்றுக் கொள்ளலாம்.
அரிய சந்தர்ப்பத்தை நழுவ விடாதீர்கள்! முந்துங்கள்!! இச்சலுகை சில தினங்களுக்கு மட்டுமே!!!

**ரவி அன் ராஜ் சில்க்ஸ்** 77, பெரியகடை, யாழ்ப்பாணம்.

(54714)

## சித்திரைப் புத்தாண்டின் சிறப்பு விற்பனை

அத்தியாவசியப் பொருள்கள் ஆடவர் - நங்கையர்களுக்கான சகலவித உள்ளாடைகள்
Curvform & Carina Brassieres Silvershield Socks & Elastic
10% முதல் 50% வரை விலைக்கழிவு! இன்னும் பலவகைகளைப் பெற்றுக் கொள்ள

**லிங்கன் ஸ்ரோர்ஸ்**

168, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம்.

(54657)


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சேமநல நூலகம் யாழ்ப்பாணம் [illegible]

# சின்னஞ் சிறு விளம்பரம்

## விற்பனைக்கு

மினிசினிமாவுக்குத் தேவையான 100 இரும்புக் கதிரைகள் விற்பனைக்கு உண்டு. உடன் தொடர்பு கொள்ளவும். இல. 844, பருத்தித்துறை வீதி, நல்லூர், யாழ்ப்பாணம். (54726)

கொக்குவில் குளப்பிட்டி/ ஆனைக்கோட்டை வீதியில், டாக்டர் சொர்ணலிங்கம் வைத்தியசாலை முன்பாக 2 பரப்புக் காணி மின்சாரம், கிணற்று வசதியுடன் விற்பனைக்குண்டு. வெதுப்பகம், மரக்காலை, கராஜ் ஆகிய வற்றுக்கு ஏற்ற இடம். தொடர்பு:- செ. ந. விஸ்வலிங்கம், சட்டத்தரணி. (54716)

நல்ல நிலையில் உள்ள Belly Super மோட்டார் சைக்கிள் விற்பனைக்குண்டு. விலை 18,000/- தொடர்பு:- வே. தவச்செல்வன், உதயன் செய்தியாளர், மாமுனை வடக்கு செம்பியன்பற்று. (54621)

ஒருவரின் சொந்தப்பாவிப்பிலுள்ள Yamaha Chappy மோட்டார் சைக்கிள் மிகவும் நல்ல நிலையில் உடன் விற்பனைக்குண்டு. தொடர்பு:- ஆ. சிவராசா, மல்லிகா, மானிப்பாய். (சி/3363)

## காணி விற்பனைக்கு

மீசாலை வடக்கு ஊர் எல்லைத்தெருவில் அமைந்துள்ள ''செருக்கலி வளவு'' நிலப்பரப்பு 11, 05குளி வீடு கிணறு பல வகைப்பட்ட வான் பயிர்கள், தென்னை, பலா, மா, பனைமரங்கள் கொண்டகாணி விற்பனைக்குண்டு. தொடர்புகொள்ள வேண்டிய முகவரி:- சி. சற்குணநாதன், ''பிருந்தாவனம்'' மீசாலை மேற்கு, மீசாலை. (54735)

மீசாலை வடக்கு வேம்பிராய் வயல்கரையில் அமைந்துள்ள ''சாளம்பையடி'' நிலப்பரப்பு 6 குளி 06.12 நில அளவையாளரால் வரைபட இல. 630 காணி, கிணறு வீடு, வான்பயிர்கள் பயன் தரக்கூடியவை விற்பனைக்குண்டு. தொடர்புகொள்ள வேண்டிய முகவரி:- சி. சற்குணநாதன், ''பிருந்தாவனம்'' மீசாலை மேற்கு, மீசாலை. (54734)

## சேவல்குஞ்சு

பிறிமா கைலைன் பிறவுண் 1 நாள் சேவல் குஞ்சுகள் உடன் விற்பனைக்குண்டு. விலை ரூபா 20 மட்டுமே. 'மல்லிகாபதி', சந்தைமுன் ஒழுங்கை, மானிப்பாய். [54697]

## தவறிவிட்டது

தியாகராஜா கிருஷ்ணராஜா என்பவரது 662790206V இலக்க தேசிய அடையாள அட்டை, 0901019485 இலக்க விசேட அடையாள அட்டை என்பன யாழ். மாநகர எல்லைக்குள் தவறிவிட்டன. கண்டெடுத்தவர்கள் 190, சிவன்பண்ணை வீதி, யாழ்ப்பாணம் எனும் விலாசத்தில் ஒப்படைக்கவும். (54720)

திருமதி மகேஸ்வரிகார்த்திகேசு, சபாபதிப்பிள்ளை நாகேஸ்வரி, வீ. பொ. கார்த்திகேசு ஆகிய மூவரினதும் விஷேடஅடையாளஅட்டையும் தேசியஅடையாள அட்டையும் கவருடன் 30-03-98 அன்று காலை சாவகச்சேரி இலங்கைவங்கிக்கும், புகையிரத நிலைய வீதி சந்திக்கும் இடையில் தவறிவிட்டது. கண்டெடுத்தவர் இல. 24, புகையிரத நிலைய வீதி, சாவகச்சேரி என்ற முகவரியில் ஒப்படைக்கவும். சன்மானம் வழங்கப்படும். (சி/3370)

## புறோயிலர் குஞ்சு

பிறிமா புறோயிலர் குஞ்சுகள், பிறிமா பிறவுண் சேவல் குஞ்சுகள் தேவையானோர் முன்கூட்டியே பதிவு செய்து கொள்ளவும். $1\frac{1}{2}$ மாதம் வளர்ச்சியடைந்த பிறிமா ஹைலன் பிறவுண் வெள்ளைப் பேட்டுக் குஞ்சுகளும் உடன் விற்பனைக்குண்டு. 'மல்லிகாபதி', சந்தை முன் ஒழுங்கை. மானிப்பாய். [54668]

## தெளிவாகப் பார்க்க

ரி. வி. நிகழ்ச்சிகளை தெளிவாகபார்ப்பதற்குபுதியஅன்ரனாக்களைப் பொருத்தவும், உங்கள் பழைய அன்ரனாக்களைத் திருத்திப் பொருத்துவதற்கும் பூஸ்ரர்களைபழுது பார்ப்பதற்கும் நாடுங்கள்! வீனஸ் தனபாலசிங்கம் B. Sc Ceylon Dip. In Electronic Engineering London — 284, ஸ்ரான்லி வீதி (நாகவிகாரை முன்பாக), யாழ்ப்பாணம். (சி/3295)

## திருத்துதல்

சகல விதமான தமிழ், ஆங்கில தட்டச்சு இயந்திரங்கள் மிகச் சிறந்த முறையில் குறைந்த கட்டணத்தில் குறித்த நேரத்தில் திருத்திக் கொடுக்கப்படும். தொடர்பு: ''ஜெசீவா'' தட்டச்சு இயந்திர திருத்த சேவை 140, பலாலி வீதி, திருநெல்வேலி. (பரமேஸ்வராச்சந்தி) காலை 7.30 மாலை 5.30 (44732)

# செம்மணி இந்துமயான அபிவிருத்திச்சபை

## ஆண்டுப் பொதுக்கூட்டம்

**26 - 04 - 1998**

மேற்படி சபையின் புதியநிர்வாக சபையைத் தெரிவு செய்வதற்கான ஆண்டுப் பொதுக் கூட்டம் எதிர்வரும் 26 - 04 - 1998 ஞாயிற்றுக்கிழமை பிற்பகல் 4. 30 மணிக்கு (புதிய நேரம்) நல்லூர் செங்குந்தா சந்தையில் அமைந்துள்ள வன்னியசிங்கம் பொதுப்பணி மன்றத்தில் (வன்னியசிங்கம் படிப்பகம்) நடைபெறும்.

உறுப்பினர்கள் அனைவரையும் தவறாது வருகை தருமாறு கேட்டுக் கொள்கின்றோம்.

கு. கயிலாயபதி
தலைவர்

பொன். தர்மேந்திரன்
செயலாளர்

பொ. இராசதுரை
பொருளாளர்

[54703]

# புரோட்டினெக்ஸ்

## புத்துணர்ச்சியை அளிக்கும்

★ தாவரப்புரதம்

★ விட்டமின்கள்

★ கனிப்பொருள்கள்

அடங்கிய போஷாக்குப் பானம்

புரோட்டினெக்ஸ் அன்றாடம்

இழக்கும் சக்தியை மீட்டுத் தருகிறது!

(சி/3358)

விற்பனையில் சலுகை!

# ராகம்ஸ் பட்டுச்சோலையின்

## புதுவருட

# மலிவு விற்பனை

யாழ். நகரிலேயே பிரசித்திபெற்ற
ராகம்ஸ் பட்டுச்சோலை
தனது வாடிக்கையாளர், நண்பர்கள்,
ஆதரவாளர்கள் நலன் கருதி புதுவருடத்திற்கென
பிரத்தியேகமாக இறக்குமதிசெய்த

**தரம்மிக்க, வர்ண வர்ண புத்தம்புதிய**

அனைத்து ஜவுளிவகைகளும் 25% கழிவில் விற்பனை
யாகிவருகின்றன. இச்சலுகை எதிர்வரும்
14 ஆம் திகதி வரையுமே.
முந்துங்கள்! உங்கள் தெரிவுக்கு!!

## ராகம்ஸ் பட்டுச்சோலை

24, நவீன சந்தை, யாழ்ப்பாணம்.

(சி/3356)

# சித்திரைப் புத்தாண்டை முன்னிட்டு

## வர்த்தகர்களுக்கு

- ★ தையலுக்குரிய பொருள்கள்
- ★ இமிற்றேசன் பொருள்கள்
- ★ சில்வர், பிளாஸ்ரிக் பொருள்கள்
- ★ திருவிழாக் காலத்து பான்ஸி விளையாட்டுப் பொருள்கள்
- ★ பாடசாலை உபகரணங்கள்
- ★ மற்றும் பல்வகையான பொருள்களை மொத்தமாகவும், ஒரே இடத்திலும் பெற்றுக் கொள்ளலாம்.

# ஜெயா அழகு மாடம்

127, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.

சில்லறையாகப் பெற்றுக் கொள்வதற்கு 149 நவீன சந்தை (வைரவர் கோயில் அருகில்)

சர்வதேச தொலைத் தொடர்புகளுக்கு
149, 160, நவீன சந்தை, யாழ்ப்பாணம்.

T. P. No:- 021 - 2405

(சி-3365)

# 60 ஆம் நாள் நினைவஞ்சலியும் நன்றி நவிலலும்



தோற்றம்:
**1927 — 09 — 26**

மறைவு:
**1998 — 02 — 08**

அமரர்

## சிவக்கொழுந்து வடிவேலு

(இளைப்பாறிய ஊழியர், அரச மரக்கூட்டுத்தாபனம்)

அந்தியேட்டி திதி: **1998 — 04 — 08**

எங்கள் குடும்ப தீபத்தைக் கண்ணீருடன் நினைவு கூரும் இவ்வேளையில்,

எங்கள் இல்லத்தலைவரை காலனிடம் இழந்து தவித்தபோது ஆறுதலளித்தவர்களுக்கும், பல வழிகளிலும் உதவிகள் புரிந்தவர்களுக்கும் எமது இதய பூர்வமான நன்றியைத் தெரிவிக்கின்றோம்.

மனைவி:- திருமதி வ. செல்லமுத்து
மக்கள்:- இரஞ்சிதமலர், ஜெயமலர், நிர்மலா, லலிதா, சிவகுமார் (U,K)
மருமக்கள்:- ச. சிறிநாதன் (டென்மார்க்) மகேந்திரலிங்கம் (கனடா)
பேரப்பிள்ளைகள்:- விஷ்ணுஷன், றொஷாகன், மதீபன், மகீசன்.

கொல்லங்கலட்டி,
தெல்லிப்பழை.

(சி/3340)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# உதயன்

## நஷ்டஈடு

போரின் போது அழிக்கப்பட்ட வீட்டு சொந்தக்காரர்களுக்கு நட்ட ஈடு வழங்கப்பட வேண்டும் என்று வடமாகாண புனரமைப்பு புனர்வாழ்வு அதிகார சபையிடம் வலியுறுத்தப்பட்டுள்ளது.

சமாதானத்துக்கும் நல்லெண்ணத்துக்குமான மக்கள் குழு இந்தக் கோரிக்கையை விடுத்திருக்கிறது.

யாழ்ப்பாண மாவட்டத்தில் போரின் போது 81, 000 வீடுகள் முற்றாக அழிந்துள்ளதாகக் கணக்கிடப்பட்டுள்ளது

'சூரியப்பிரகாசம்' இராணுவ நடவடிக்கையின் போது படையினர் முன்னேறி வந்த பல பிரதேசங்களில் வீடு எது, எல்லை எது என்று தெரியாதவாறு பல வீடுகள் நாசம் செய்யப்பட்டன. பல வீடுகள் குண்டு வீச்சினால் அழிக்கப்பட்டன. மேலும் பல வீடுகள் புல்டோசர்கள் மற்றும் கனரக இயந்திரங்கள் கொண்டு தகர்க்கப்பட்டன.

யாழ்ப்பாணத்தை விடுதலைப் புலிகளிடம் இருந்து கைப்பற்றி விட்டோம்; போரில் வெற்றிவாகை சூடிவிட்டோம், என்று அறிவிக்கும் இலக்கு ஒன்றுடனேயே இராணுவ நடவடிக்கை முடுக்கிவிப்பட்டது.

போர் வெறியே அப்போது கோரத்தாண்டவம் ஆடியது. குடாநாட்டில் மக்கள் மீண்டும் வந்து குடியிருக்கக் கூடாது என்ற நோக்கத்துடனேயே போர் நடத்தப்பட்டதா என்று எண்ணுமளவுக்கு வேண்டுமென்றே பேரழிவு உண்டாக்கப்பட்டது.

மண் வீடு ஒன்றை, குடிசை ஒன்றை அமைக்க இப்போது எவ்வளவு செலவாகிறது? யாழ்ப்பாணத்து மக்களில் மிகப் பலரும் தமது வாழ்நாள் தேட்டம் முழுவதையும் கொட்டித்தான் இந்தக் கல் வீடுகளைக் கட்டினார்கள். ஒவ்வொரு வீட்டு உரிமையாளனும் எத்துணை கஷ்டத்துடனும் கடனுடனும், சிரமத்துடனும் வீட்டைக் கட்டியிருப்பான் என்பதனை உணரக் கூடிய தன்மை சிப்பாய்களிடமோ, அதிகாரிகளிடமே இருந்திருக்கவில்லை. தமிழர்களின் சொத்து எந்த அளவுக்கும் அழிக்கப்படலாம் என்ற வக்கிரத்துடனேயே இந்த அழிவு வேலை நடத்தப்பட்டிருக்கும் என்பதில் சந்தேகமில்லை.

போர் வெறியின் உச்சத்தில் அரசாங்கத்தினரும், அதன் அரசியல் தலைவர்களும்கூட, யாழ்ப்பாணமும் அதன் மக்களும் அழிந்தாலும் பரவாயில்லை என்ற எண்ணத்துடனேயே, அதனைப் படைகள் கைப்பற்றியாக வேண்டும் என்று உத்தரவு போட்டார்கள்.

போரினால் விளைந்த பேரழிவு அனைத்துக்கும் அரசாங்கமே முழுப் பொறுப்பும் ஏற்க வேண்டும்: மழுப்பல், சளாப்பல்களுக்கு இடமிருக்க முடியாது.

யாழ்ப்பாணத்தைப் புனரமைக்கிறோம்; புனர் நிர்மாணம்செய்கிறோம்என்று கூறி நகரப் புறங்களில் சில திட்டங்களை நடைமுறைப்படுத்தி வெளிநாடுகளிடம் நிதி உதவி பெற முனையக் கூடாது. முதலில் மக்கள் சொத்துகளுக்கு உண்டான அழிவுகளுக்கு நஷ்டஈடு வழங்க வேண்டும்.

# இனியுத்தம் ஏற்படாத விதத்தில்

# அரசு நடவடிக்கை எடுத்து வருகிறது

## அனுருத்த சொல்கிறார்

கொழும்பு, ஏப் 8

நாட்டில் யுத்தம் இனி ஏற்படாதவாறு, யுத்தத்தை நிரந்தரமாகவே முடிவுக்குக் கொண்டுவருவதற்கான நடவடிக்கைகளை அரசு மேற்கொண்டு வருகிறது.

இவ்வாறு ஹினிதுமைத் தொகுதிக்குட்பட்டதெல்லவ கிராமத்திற்கான மின்விநியோகத் திட்டத்தை ஆரம்பித்து வைத்து உரையாற்றிய பிரதிப் பாதுகாப்பு அமைச்சரும், நீர்ப்பாசன, மின்சக்தி அமைச்சருமான ஜெனரல் அனுருத்தரத்வத்தை தெரிவித்தார்.

அமைச்சர் தொடர்ந்து பேசுகையில்:

இன்று அரச படைகள் வடக்கு – கிழக்கின் 90சதவீத நிலப் பிரதேசத்தைக் கைப்பற்றின.

தாம் பதவியேற்றபோது வட. கிழக்கின் நிர்வாகம் பிரபாகரனின் கையிலேயே இருந்தது. அன்று வவுனியாவுக்கு அப்பால் எம்மால் போக முடியாத நிலை இருந்தது. ஆனால் இன்று நிலைமை மாறிவிட்டது.

தலதா மாளிகை குண்டு வெடிப்பு பற்றி எதிர்க்கட்சியினர் அரசு மீது கண்டனம் தெரிவிக்கின்றனர். தலதா மாளிகைக்குச் சரியான பாதுகாப்பு அளிக்கத் தவறியதாக எம் மீது குற்றம் சுமத்தப்படுகிறது.

முன்னைய ஆட்சியின் போது வடக்கு-கிழக்கு நிர்வாகம் புலிகளிடம் வசம் இருந்ததன் காரணமாகவே இத்தகைய தாக்குதல்கள் இடம்பெறவில்லை என்பதை நாம் நினைவூட்ட விரும்புகிறோம்.

யுத்தத்தில் தோல்வியடைந்துவரும்புலிகள்தெற்கில் குண்டுவெடிப்புகளை நடத்தி நாட்டில் குழப்பத்தை ஏற்படுத்த முயற்சிக்கின்றனர்.

இப்படி அவர் கூறினார்.

## உயர் தொழில்நுட்ப நிறுவன மாணவர்களுக்கு கணனிகள்

யாழ்ப்பாணம், ஏப் 8

உயர் தொழில் நுட்ப நிறுவனத்தில் கல்விகற்கும் மாணவர்களின் கல்விக்காக பதின்மூன்று புதிய கணனிகள் கொழும்பில் இருந்து எடுத்து வரப்பட உள்ளன.

உயர் தொழிநுட்ப நிறுவனத்தில் கல்வி கற்கும் மாணவர்களுக்கு கணனியும் ஒரு பாடநெறியாக இருக்கின்ற போதிலும் அங்கு கணனி வசதிகள் இன்மையால் அந்த மாணவர்கள் கணனிப்பாடநெறியை ஏட்டுக்கல்வியாக மட்டுமே கற்று வந்தனர்.

தற்பொழுது இம் மாணவர்களின் செயல் முறைக் கல்விக்காக பதின்மூன்று கணணிகள் உயர்கல்வி அமைச்சால் வழங்கப்பட்டுள்ளன.

இக் கணனிகள் அனைத்தும் மாஹோ கப்பல் மூலம் இங்கு எடுதுத் வரப்பட உள்ளன.

கணனிகள் வந்து சேர்ந்தும் மாணவர்களுக்கான கணனிச் செய்முறை வகுப்புக்களை நடத்துவதற்கான ஏற்பாடுகள் நடைபெற்று வருகின்றன.

(இ-9)

## அதிகாரசபைத் தலைவர் சந்திக்காதது குறித்து இணையம் கவலை தெரிவிப்பு

யாழ்ப்பாணம், ஏப். 8

யாழ். மக்கள் அனுபவிக்கும் பிரச்சினைகளையும் அதற்கான பரிகாரங்களையும் எடுத்துரைப்பதற்கு சந்தர்ப்பம் தரும்படி வடபகுதி புனர்வாழ்வு புனரமைப்பு அதிகாரசபைத்தலைவருக்கு யாழ். அரச அதிபர் ஊடாக அனுப்பிய தமது கடிதம் கவனத்துக்கு எடுத்துக் கொள்ளப் படாததையிட்டு யாழ். மாவட்ட அரசசார்பற்ற நிறுவனங்களின் இணையம் கவலை தெரிவித்துள்ளது.

மக்கள் பிரச்சினைகளை அரசாங்க நிர்வாகிகள் முழுமையாக எடுத்துரைக்க முடியாத ஒருசூழ்நிலை இருக்கின்ற பொழுதுமக்கள் நலன் காக்கும் அரச சார்பற்றநிறுவனங்களின் அபிப்பிராயங்களைப்பெற்று உடன் நடவடிக்கை எடுக்க வேண்டியது அதிகார சபையின் முக்கிய கடமையாகும் என்று அரச சார்பற்ற நிறுவன இணைய பிரமுகர் ஒருவர் மேலும் தெரிவித்தார்.

புனர்வாழ்வு திட்ட கொள்கை, பாதிக்கப்பட்ட மக்களின் நஷ்ட ஈட்டுக் கொடுப்பனவு, விவசாயிகளுக்குதேவையானபொருள்கள், வீடு கட்டடப்பொருள்கள், சுயதொழில் முயற்சிக்கான உதவிகள், மீன்பிடி வர்த்தகம், தொழில் அபிவிருத்திபோன்றவைதொடர்பாகப் பேசுவதற்கு அனுமதி கேட்டு அதிகாரசபைத்தலைவருக்கு கடிதம் அனுப்பப்பட்டது. ஆனால் இதற்கான சந்தர்ப்பம் வழங்கப்படவில்லை.

யாழ். மாவட்டஅரச சார்பற்ற நிறுவனங்களின்இணையத்துக்கு நேரம் ஒதுக்கி கொடுக்கப்படாத நிலையில் வெளியூர் தொண்டர் நிறுவனங்களைஅழைத்து அதிகார சபைத்தலைவரும் அவருடன் வந்தவர்களும் பேச்சுவார்த்தைநடத்தியுள்ளனர்.

இவர்கள் தற்காலிகமாக குறிப்பிட்ட காலத்துக்கு நின்று பிற நாடுகள் கொடுக்கும் நிதியில் திட்டங்களை அமுல்படுத்துவதற்காக வே இருக்கிறார்கள்.

ஆனால்உள்ளூர் அரச சார்பற்ற நிறுவனங்கள் மக்களோடு இணைந்து தொடர்ந்து சேவையாற்றுவன என்பது குறிப்பிடத்தக்கது.

இப்படி மேலும் தெரிவிக்கப்பட்டது. (இ-5)

## மாதர் அபிவிருத்தி பயிற்சி

வட்டுக்கோட்டை ஏப். 8

கிராமஅபிவிருத்தி திணைக்களமும், வலி. மேற்குப் பிரதேச செயலகமும் இணைந்து நடத்தும் இலவச நடமாடும் மாதர் அபிவிருத்தி பயிற்சி நெறி இந்த ஆண்டு பண்ணாகம் மாதர் சங்க மண்டபத்தில் நடைபெறும்.

இப் பயிற்சி ஒருவருட காலம் நடைபெறும்.

மனை அபிவிருத்தி தொடர்பான உடையமைத்தல், உணவு தயாரித்தல், பெண்கள் அலங்காரம் போன்ற பல துறைகளிலும் பயிற்சி வழங்கப்படும்.

இதற்காக படித்த 30 யுவதிகளைத் தெரிவு செய்வதற்கான விண்ணப்பங்கள் பிரதேச செயலகத்தால் கோரப்பட்டுள்ளன.

[இ-12]

## தாமதித்து வரும் பஸ்ஸால் அரச ஊழியர் சிரமம்

யாழ்ப்பாணம். ஏப். 8

மாதகல் — யாழ்ப்பாணம் 789 இலக்க பாதையில் பயணம் செய்யும் அலுவலக உத்தியோகத்தர்களுக்கான பஸ் யாழ்ப்பாணம் வந்து சேருவதில் தாமதம் ஏற்படுவதாக அலுவலர்கள் பலரும் கவலை தெரிவிக்கின்றனர்.

இதனால் உரிய நேரத்திற்கு அவர்கள் கடமைக்குச் சகமுளிக்க முடியாமல் போவதாகத் தெரிவிக்கப்படுகிறது.

மாதகலில் இருந்து காலை 6. 45 மணிக்குப் புறப்படும் மேற்படி பஸ் பண்டத்தரிப்பு, சித்தன்கேணி, வட்டுக்கோட்டை, அராலி, நாவாந்துறை ஊடாக யாழ். பஸ் தரிப்பு நிலையத்தை காலை 7. 45 மணிக்கு அடைய வேண்டும். எனினும் சம்பந்தப்பட்ட பஸ் கடந்த சில நாள்களாக நேரம் தாமதித்து வருவதாகத் தெரிவிக்கப்பட்டது.

(இ-4)

### உதய வாக்கு

நுண்ணறிவு அன்புடன் சேர்ந்து விட்டால் அதனால் அடைய முடியாதது ஒன்றுமே அவனியில் இல்லை.

-கீதை

## யாழ். வண்ணை. வைத்தீஸ்வரன் மகோற்சவ சிறப்பம்சம்

### அம்பலத்தாடிடும் ஐயனே!

பிறவிப்பிணி தீர்க்கும் மருந்தாய் ஒளி காலும்
பிஞ்ஞகா; வேத முதல்வனே!
மறவா துன்னையெம் மனத்தகத்தே வைத்தோம்
வளமான வாழ்வருள்வாய் ஈசா!
இறவாத இன்ப அன்பு வேண்டுவோர்க் கருளும்
வித்தகா; வண்ணை வைத்தீசனே!
அறவா நீ அம்பலத்தாடிடும் ஐயனே
அடியார்க்கருள் [illegible]
[illegible]

இன்று புதன்கிழமை பதினேழாம் திருவிழா

### நாளை

பங்குனி 26

வியாழக்கிழமை

திதி: திரயோதசி

முன்இரவு 11.54 வரை.

நட்சத்திரம்: பூரம்

முற்பகல் 01.32 வரை.

பிரதோஷ விரதம்

சுபநேரம்: 7.37–9.07

ராகு காலம்: 1.37– 3.17

(இரவுக்கும் பகலுக்கும் பழைய நேரப்படி)

## திருமந்திர விரிவுரை

நல்லூர் திருஞானசம்பந்தர் ஆதீனத்தில் ஒவ்வொரு மாதமும் பௌர்ணமி தினம் நடைபெற்று வரும் திருமந்திர விரிவுரையின் இம் மாதத்துக்கான விரிவுரை எதிர்வரும் சனிக்கிழமை மாலை 4–00 மணிக்கு ஆதீன கலா மண்டபத்தில் நடைபெறும்.

சிவத்தமிழ் வித்தகர் ஸ்ரீ சிவமகாலிங்கம் விரிவுரையை நிகழ்த்துவார். (இ-30)

## விசவத்தனை முருகமூர்த்தி தேர்த்திருவிழா

பண்ணாகம் விசவத்தனை முருகமூர்த்தி கோயில் வருடாந்த தேர்த்திருவிழா நாளை நடைபெறவுள்ளது.

நாளை காலையில் தேர்த்திருவிழாக் கிரியைகள் ஆரம்பமாகும். மு. ப. 10 மணிக்கு சண்முகார்ச்சனையும் அதனைத் தொடர்ந்து வசந்த மண்டபப் பூசையும் நடைபெற்று, தேர் உலா இடம்பெறும்.

பங்குனி உத்தர தினமான வெள்ளிக்கிழமை தீர்த்தத் திருவிழா நடைபெறும்,

(அ)

## வண்ணை. சிவன் தேர்த் திருவிழா நாளை

யாழ். வண்ணை ஸ்ரீ வைத்தீஸ்வரன் தேவஸ்தான தேர்த்திருவிழா நாளை வியாழக்கிழமை நடைபெறவுள்ளது.

நாளை காலை 7 மணிக்கு வசந்த மண்டபப் பூசையாகி 8. 30 மணியளவில் வாலாம்பிகா சமேத வைத்தீஸ்வரப் பெருமான் பஞ்சமூர்த்திகளாக ரதத்தில் ஆரோகணித்தல் இடம் பெறும்.

அதைத் தொடர்ந்து பஞ்சரதங்களும் வீதிவலம் வந்து நண்பகல் 12. 00 மணியளவில் ரதத்திலிருந்து இறங்கி விசேஷ மண்டபப்படியுடன் பூசையாகி எம்பெருமான் ஆலயத்தினுட் பிரவேசிக்கும் காட்சி இடம் பெறும். (அ)

### தவக்கால சிந்தனை

கூடுவிட்டு ஆவி போனால் கூடவே வருவதென்ன? என்ற நிலையறிந்தும் கூடா ஒழுக்கம் உள்ளவனாக மனிதன் இருக்கின்றான். பணத்திற்காக எதையும் செய்ய ஆயத்தமாகின்றான். உயிரைக்காக்கும் உரிமையையும் அந்நியப்படுத்துகிறான்.

இயேசுவோடு கூட இருந்த யூதாஸ் 30 வெள்ளிக்காசுக்கு முதல்வனைக் காட்டிக்கொடுத்தான் வரலாற்றில் இன்றும் தீயவன் என்ற பெயர் பதித்துள்ளான். நம்மில் எத்தனை பேர் இவ்வாறு உள்ளோம்? அறிந்தும் செய்வதே அநியாயம் - பாவம் குறைகளைக் காண்பவனல்லன் நிறைவுகளைத் தட்டிக் கொடுப்பவன் தான் புனித வாழ்வுப் பயணத்திற்குத் தகுதியுள்ளவன் ஆகின்றான். மன்னித்து ஏற்றுக் கொள்பவனுக்குத் தான் மகிமையின் கிரீடம் வாய்க்கப்பெறும்.

நேர்மையிலும், உண்மையிலும் வாழ்வைக் கட்டி எழுப்புபவன் தான் இப் புவியிலும், மறு வாழ்விலும் நிறைவைக் காண்பான். புனித தத்துவத்தை நோக்கி நடைபோடுவோம்; பரிசுத்த வாரம் எமக்கு பொருளுள்ளதாகும்.

- அன்ரனி பீற்றர்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## பாலியல் துஷ்பிரயோகம்

# ஆதர் சி கிளார்க் மீது பொலீஸார் விசாரணை

கொழும்பு, ஏப்.8

சிறுவர்களுடன் பாலியல் ரீதியில் தொடர்புகளைக் கொண்டிருந்தார் என்ற குற்றச் சாட்டுத் தொடர்பாக விஞ்ஞான புனைகதை எழுத்தாளர் ஆதர் சி.கிளார்க்கை பொலீஸார் விசாரணை செய்துள்ளனர்.

கொழும்பிலுள்ள அவரது இல்லத்தில் வைத்து அவரது வாக்கு மூலம் பதிவு செய்யப்பட்டதாகப் பிரதிப் பொலீஸ் மா அதிபர் எம். எஸ். எம். நிஸாம் தெரிவித்தார்.

தமது இளம் பராயத்தில் ஆதர் சி. கிளார்க் பாலியல் தொடர்பு கொண்டிருந்தார் என்று ''சண்டேமிரர்'' பத்திரிகைக்குத் தகவல் வழங்கிய மூன்று பேர் மீதும் விசாரணைகள் மேற்கொள்ளப் பட்டன.

இரு தரப்பினருமே இக் குற்றச்சாட்டைத் தற்போது மறுத்து வருகின்றனர்.

(ஐ-9)

## ஸ்ரீசாரதா படக்காட்சி

யாழ்ப்பாணம், ஏப். 8

பருத்தித்துறை ஸ்ரீ ராமகிருஷ்ண சாரதா சேவாச்சிரமத்தின் ஆதரவில் இன்று புதன்கிழமை காலை 10-00 மணிக்கு யாழ். இந்துமகளிர் கல்லூரி மண்டபத்தில் அன்னை ஸ்ரீ சாரதாதேவியின் வாழ்க்கை வரலாற்றைச் சித்திரிக்கும் வீடியோப் படக் காட்சி காண்பிக்கப்படும்.

லண்டனில் உள்ள இராம கிருஷ்ண வேதாந்த மடத்தில் இருந்து இவ்வீடியோப் படப் பிரதி இங்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளது.

(ஐ-7-135)

## ST. JOHN'S COLLEGE JAFFNA

## பிற்போடப்பட்டது

**08—04—1998** இன்று புதன் நடைபெற இருந்த ''ஆனந்'' இசைக் குழுவின் ''ஆனந்த ராகம்'' இசை நிகழ்ச்சி தவிர்க்க முடியாத காரணத்தால் **15—04—1998** (புதன்கிழமை) மாலை **3** மணிக்கு பிற்போடப்பட்டுள்ளது என்பதனை அறியத்தருகின்றோம்.

உயர்தர மாணவர் மன்றம்.

(சி/ 3372)

# யாழ். போதனா வைத்தியசாலை

யாழ்ப்பாணம்

# பதவி வெற்றிடம்

## மின்னியல் உபகரணங்கள் திருத்துவதற்கான விண்ணப்பம் கோரல்

## (ELECTRO MEDICAL MECHANIC)

## வகுப்பு I தரம் II

மேற்படி பதவியில் இரண்டு இடத்துக்கான வெற்றிடத்தை நிரப்புவதற்கு கீழ்க்காணும் தகுதியுடையவர்களிடமிருந்து விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன. மாதிரி விண்ணப்பப்படிவம் இதனுடன் இணைக்கப்பட்டுள்ளது. அதன்படி விண்ணப்பங்களைத் தயாரித்து எதிர்வரும் **25 - 04 - 98**க்கு முன்பதாக இப்பணிமனைக்குச் சமர்ப்பிக்கவும்.

### வயதெல்லை:

**18** வயதுக்கு மேற்பட்டவராகவும் **45** வயதுக்கு உட்பட்டவராகவும் இருத்தல் வேண்டும்.

### கல்வித் தகைமையும் பிறதகைமைகளும்

1) தமிழ் பாஷை, கணிதம், விஞ்ஞானம் உட்பட மூன்று பாடங்களில் திறமைச்சித்தியுடன் **6** பாடங்களில் ஒரே முறையில் **5** பாடங்களுக்குக் குறையாமல் இரண்டு அமர்வுகளுக்கு மேற்படாமல் க. பொ. த. (சாதாரண தரப்) பரீட்சையில் சித்தியெய்தியிருத்தல் வேண்டும்.

2) அரசாங்கத்தால் அங்கீகரிக்கப்பட்ட நிறுவனத்தில் மின்சார அல்லது இலத்திரனியல் பகுதியில் **3** வருட முழுநேர கற்கைநெறி ஒன்றில் சித்தியடைந்திருத்தல் வேண்டும்.

அல்லது

இங்கிலாந்தில். (City & Guilds) இலத்திரனியலில் அல்லது மின்னியலில் ஒரு முழு அளவிலான தொழில் நுட்ப சான்றிதழ் வைத்திருத்தல் வேண்டும். இப்பதவிக்கு தகுதிகாண் திறமைத் தடைப் பரீட்சையோ பதவி உயர்வோ இல்லை.

சம்பள அளவு::- *45900 – 14 x 1320 — 6 x 1560 - 73740*
(தொகுதி — T - 2 - 1

### தொழில் சம்பந்தமான பரீட்சை:

இப்பரீட்சை **2—4** மணித்தியாலம் கொண்டதாக அமையும். ஒரு பரீட்சை சபையால் வழங்கப்படும் மின்னியல் உபகரணங்களின் பிழையைக் கண்டுபிடித்துத் திருத்தக்கூடிய ஆற்றலைப் பரீட்சிப்பதாக இருக்கும்.

சேவை நிபந்தனை: தாபனக்கோவை

II உபவிதி 10 — 12 வரைக்கும் அமைவானதாக இருக்கும். இப்பதவி நிரந்தரமானதும் விதவைகள்/ அநாதைகள் ஒய்வூதியத்திற்கு உரித்துடையதுமாகும்.

**வைத்திய கலாநிதி (செல்வி) என். கனகரத்தினம்**
பணிப்பாளர்
**யாழ். போதனா வைத்தியசாலை.**

## மாதிரி விண்ணப்பப்படிவம்

### மின்னியல் உபகரணங்கள் திருத்துவதற்கான விண்ணப்பம்

1) முழுப்பெயர்:-
2) பிறந்த திகதி:-
3) வயது **25 - 04 - 98** அன்று:-
4) விலாசம்:-
5) இலங்கைப் பிரஜையா (பரம்பரையாகவா/ பதிவினாலா):-
6) கல்வித்தகைமைகள்:-
   க. பொ. த. (சாதாரண தரம்):-
   க. பொ. த. (உயர்தரம்)
7) அனுபவம் பற்றிய தகைமைகள்:-
8) தொழில் நுட்பக் கல்லூரியில்/ அல்லது வேறு அரசாங்கத்தால் அங்கீகரிக்கப்பட்ட நிறுவனத்தில் பெற்றுக் கொண்ட சான்றிதழ்களின் விவரம்:-

மேற்கூறப்பட்ட விவரங்கள் யாவும் சரியானவையும் உண்மையானவையும் என இத்தால் உறுதிப்படுத்துகின்றேன். இவற்றில் ஏதாவது பிழையென கண்டுபிடிக்கப்பட்டால் அல்லது நிரூபிக்கப்பட்டால் தெரிவுக்கு முன்னர் அல்லது தெரிவின் பின்னர் எதுவித நஷ்டஈடுமின்றி எனது நியமனத்தை இழப்பதற்கு நான் ஆளாவேன் என்பதை நான் நன்கு அறிவேன்.

.......................................
விண்ணப்பதாரியின் கையொப்பம்

திகதி:-

(சி/3360)

# 10-ம் ஆண்டு நினைவஞ்சலி



பிறப்பு: 24 — 11 — 1963

இறப்பு: 15 — 03 — 1988

**செல்வி நவரத்தினம் லோகேஸ்வரி**
[தேவி]
திதி: 08-04-1998

பாசத்தின் ஒளி விளக்காய் பாரினில் வந்துதித்த
தேசம் மகிழ இன்று தேன்மொழி பயின்று நின்றீர்
வாசமலர் வாட இங்கு காதல் பொய்த்ததுவே!
அழைத்து நின்றீர்!

பத்தாண்டுகள் போனதுவே என்றும்
உம் நினைவுகள் எம் மனதில்.

- குடும்பத்தினர்

தனங்களப்பு,
சாவகச்சேரி.

(54741)

எங்கள் அன்புத் தெய்வத்தின்

# முதலாம் ஆண்டு நினைவஞ்சலி



பிரம்ம ஸ்ரீ
**செல்லத்துரைக்குருக்கள் சாம்பசிவக்குருக்கள்**

மலர்வு: **20—03—1918**

உதிர்வு: **21—03—1997**

திதி: திரயோதசி **09—04—1998** வியாழக்கிழமை

பண்பின் நிறைகுடமே
பாசத்தின் இலக்கணமே
அனுதினமும் அம்பாளை அர்ச்சித்த
ஐயாவே! கண்ணின் மணி
போல் ஏமை எல்லாம் காத்த
பெருந்தகையே!
உங்கள் நினைவு எம் மனதில்
என்றும் நிலைத்திருக்கும்.
அம்பாள் துணை

உங்கள் பிரிவால் துயருறும்
- குடும்பத்தினர்

ஆவாரம்பிட்டி முத்துமாரி அம்மன் கோயில்
அராலி கிழக்கு,
வட்டுக்கோட்டை.

(54736)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அநுராதபுரம் நீதிமன்றில் பிணையில் விடப்பட்ட 28 பேர் பற்றிய விவரம்

யாழ்ப்பாணம், ஏப். 8

களுத்துறை சிறைச்சாலையில் தடுத்து வைக்கப்பட்டிருந்த வடபகுதியைச் சேர்ந்த 28இளைஞர்கள் உட்பட 31 பேர் கடந்த மாதம் 23 ஆம் திகதி அநுராதபுரம் நீதிவான் நீதிமன்றத்தால் பிணையில் விடப்பட்டனர்.

பிணையில் விடுதலையானோரின் பெயர் முகவரிகள் அடங்கிய விவரங்கள் கடந்த வார இறுதியில் யாழ்ப்பாணத்திலுள்ள மனித உரிமை ஆணைக்குழு அலுவலகத்துக்கு அனுப்பப்பட்டிருந்தன.

விவரம் வருமாறு:-

★ எ. பிரதீபன் — கோண்டாவில் வடக்கு.

★ என். உமாபதி — பொலிப்புளியடி, சங்கானை.

★ ஜி. குணதீஸ்வரன் — கோண்டாவில் வடக்கு.

★ கந்தசாமி அமலன் — கல்மடு வீதி, இராசேந்திரபுரம், கிளிநொச்சி.

★ பாலசிங்கம் ஸ்கந்தகுமார் — கனகநகர், வலந்தலை, காரைநகர்.

★ பி. கணேசநாதன்—நீதிமன்றச் சந்தி, மிருசுவில்.

★ கே. தர்மசுதன் — புலவர் முகாம், நவாலி வடக்கு.

★ கே. சந்திரகுமார் — கோணாமலை வீதி, கொக்குவில் கிழக்கு.

★ ஆர். நவநீதன்—சாவற்காடு, சுதுமலை வடக்கு.

★ எம். சுரேஸ்சர்மா — வரம்புரம் கிளிநொச்சி.

★ கந்தசாமி சிவகுமார் — 68, றீகன் நகர், நாவாந்துறை.

★ எஸ். நற்குணம்—அகதி முகாம், அக்கராயன்.

★ எ. பாஸ்கரன் — குடத்தனை வடக்கு.

★ வை. ராஜ்குமார் — பன்னதனைய், பருத்தித்துறை.

★ எஸ். கே. ராமசுந்தரம் — பன்னதனைய், பருத்தித்துறை.

★ எ. எ. மேர்வின் — 35/34, 3ஆம் குறுக்குத்தெரு, குருநகர்.

★ எஸ். பி. ரெனிசன் றொபேர்ட் — 3, அன்ரனிஸ் றோட், பாசையூர்.

★ எம். குலசேகரம் — நாவாந்துறை.

★ ஆர். நீக்கலஸ் — 3ஆம் குறுக்குத் தெரு, நாவாந்துறை தெற்கு.

★ எல். ஜேனற்ஜீவராசன் — அர்ச்பீற்றர் வீதி, நவாலி.

★ எஸ். பி. அன்றன் ராதிதாஸ்—3ஆம் மைல் கட்டை, பொலிகண்டி, அல்வாய்.

★ பி. அருள்தாஸ் அலன்துரை — அல்வாய் தெற்கு, அல்வாய்.

★ டபிள்யு. சிவலோகநாதன் — 2 ஆம் குறுக்குத் தெரு, கொழும்புத்துறை,

★ ஜே. பி. விக்ரர் — 212, சாமுவேல்புரம், தூத்துக்குடி, தமிழ் நாடு.

★ எஸ். பானராசாம் அல்லது சின்னக்கறுப்பன் — பெரிய பட்டணம் வீதி, தாம்பரம், இந்தியா.

★ வெள்ளைச்சாமி இராஜா — சிங்கராசபுரம், எஸ். ரி. பி. வீதி, மதுரை.

★ யேசுதாசன் அன்ரனி — 11/9, அர்ச் ஜேம்ஸ வீதி, குருநகர்.

★ யேசுதாசன் டக்ளஸ் — 11/9, அர்ச் ஜேம்ஸ் வீதி, குருநகர்.

★ கே. வைரவநாதன் — தனங்களப்பு, சாவகச்சேரி.

★ பி. ஆனந்தரார்சா—புன்னாலைக்கட்டுவன் சுன்னாகம்.

★ எஸ். கனவேல் — உக்குளங்குளம், வவுனியா.

(இ-7)

# சிப்பாயின் வாகனம்மோதி மற்றொரு சிப்பாய் பலி

யாழ்ப்பாணம், ஏப். 8

சிப்பாய் செலுத்திச் சென்ற வாகனம் மோதியதில் வீதியால் சென்றுகொண்டிருந்த மற்றொரு சிப்பாய் பலியானார்.

மேற்படி சம்பவம் கடந்த 4ஆம் திகதி மயிலிட்டிப் பகுதியில் இடம் பெற்றது.

பலாலியில் நிலை கொண்டுள்ள 310 ஆவது படைப் பிரிவைச் சேர்ந்த எஸ். குணபால என்ற சிப்பாயே உயிரிழந்தவர் ஆவார்.

வாகனத்தைச் செலுத்திச் சென்ற அதே படைப் பிரிவைச் சேர்ந்த ஏ. ஜி. எஸ். பி பட்டக்கல என்ற சிப்பாய் நேற்று மல்லாகம் நீதிமன்றில் மாவட்ட நீதிபதி மு. திருநாவுக்கரசு முன்னிலையில் ஆஜர் செய்யப்பட்டார்.

இதனை விசாரித்த நீதிவான் மேற்படி சந்தேகநபரை 2 ஆயிரம் ரூபா காசுப்பிணையில் விடுமாறும் – எதிர்வரும் மே 25ஆம் திகதி நீதிமன்றில் ஆஜராகுமாறும் உத்தரவிட்டார்.

(இ-7)

# சமய சந்நிதிகளில்

யாழ்ப்பாணம், ஏப். 8

வண்ணை சாந்தையர் மடம் ஸ்ரீ கற்பகவிநாயகர் கோயிலில் நடைபெற்று வரும் கந்தபுராண படனத் தொடரில் இன்று காலை 7 மணி முதல் சூரபத்மன் வதைப்படல புராணபடனம் நடைபெறவுள்ளது.

(இ-8)

★ ★ ★

அரியாலை நீர்நொச்சித்தாழ்வு சித்திவிநாயகர் ஆலயத்துக்கு அருகில் அமைந்துள்ள சிவன்கோயிலில் நிர்மாணிக்கப்பட்டுள்ள புதிய சித்திரத்தேர் வெள்ளோட்டம் இன்று காலை 8-30 மணிக்கு நடைபெறும்.

ஆலய பரிபாலன சபைத் தலைவர் மு. மயில்வாகனம் தலைமையில் நடைபெறும் இவ்வைபவத்தில் நல்லை ஆதீன முதல்வர் ஸ்ரீலஸ்ரீ சோமசுந்தர பரமாச்சாரிய சுவாமிகள், ஆலய பிரதம குரு இ. சுப்பிரமணியக் குருக்கள் ஆகியோர் ஆசியுரை வழங்குவர். (இ-3)

★ ★ ★

அளவெட்டி அலுக்கை நாவலடி ஞானவைரவர் ஆலயத்தில் இன்று புதன்கிழமை காலை 9 மணிக்கு பிராயச்சித்த அபிஷேகம், பூசைகள் என்பன நடைபெறும் இதனை தொடர்ந்து நித்திய பூசைகள் தினமும் நடைபெற்று வரும் (இ-135)

★ ★ ★

மீசாலை கிழக்கு சித்திர வேலாயுதர் இந்து மன்றம் நடத்தும் கந்தரனுபூதி 1008 ஆம் நாள் சிறப்புவிழா எதிர் வரும் ஞாயிற்றுக் கிழமை பிற்பகல் 2 மணிக்கு மீசாலை கிழக்கு சித்திர வேலாயுதர் ஆலய மண்டபத்தில் நடைபெறும்.

(இ-4)

★ ★ ★

மூளாய் முத்துக் குமாரசாமி ஆலய தேர்த்திருவிழா நாளை வியாழக்கிழமை காலை 9. 30 மணிக்கு நடைபெறும் மறுநாள் வெள்ளிக் கிழமை தீர்த்தோற்சவம் இடம்பெறும். (இ-4)

★ ★ ★

நெல்லியடி தடங்கன் புளியடி முருகமூர்த்தி ஆலய மணவாளக்கோல விழா எதிர்வரும் வெள்ளிக்கிழமை காலை 7. 30 மணிக்கு ஆயிரத்து எட்டு பஞ்சகுண்ட சங்காபிஷேகத்துடன் நடைபெறும். (இ-4)

சங்கரத்தை பத்திகாளி அம்மன் கோயில் தேர்த்திருவிழா எதிர்வரும் வெள்ளிக் கிழமை பிற்பகல் 1 மணியளவிலும், தீர்த்தத்திருவிழா சனிக்கிழமையும் நடைபெறும். (இ-12)

★ ★ ★

உடுப்பிட்டி இமையாணன் அருள்மிகு பெரியதம்பிரான் (சிவன்) ஆலய வருடாந்த உற்சவம் நாளை மறுதினம் 10 ஆம் திகதி காலை 9 மணிக்கு கொடியேற்றத்துடன்ஆரம்பமாகி தொடர்ந்து 10 தினங்கள் நடைபெறும்.

7ஆம் திருவிழாவன்று வேட்டைத்திருவிழாவும், 8 ஆம் திருவிழாவன்று சப்பறத் திருவிழாவும், 9ஆம் திருவிழாவன்று தேர்த்திருவிழாவும் 10 ஆம் திருவிழாவன்று தீத்தத் திருவிழாவும் இடம் பெறும். (இ-3)

★ ★ ★

யாழ். வண்ணை கன்னாதிட்டி அருள்மிகு ஸ்ரீ காளி அம்பாள் ஆலயத்தின் ''திருக்குளிர்ச்சி'' திருநன்னீராட்டு உற்சவம் எதிர்வரும் வெள்ளிக்கிழமை காலை 9.00 மணிக்கு விசேட அபிஷேகம், பூசை, ஆராதனைகளுடன் இடம் பெறும்.

(இ-30)

# லங்கா சிமெந்து ஊழியர் கொடுப்பனவு

லங்கா சிமெந்து லிமிட்டெட் ஊழியர்களின் ஜனவரி முதல் மார்ச் வரையிலான மூன்று மாதக் கொடுப்பனவுகள் இன்று புதன்கிழமையும் நாளை வியாழக்கிழமையும் யாழ்ப்பாணம் கொம்மேர்ஷல் வங்கியில் வைத்துவங்கி அலுவலக நேரத்தில் வழங்கப்படும் என அறிவிக்கப்பட்டுள்ளது.

(இ)

# ஒத்திவைப்பு

யாழ்ப்பாணம், ஏப். 8

யாழ். செயலகத்தில் இன்று புதன்கிழமை காலை நடைபெறவிருந்த மாவட்ட விவசாயக்குழுக்கூட்டம் தவிர்க்க முடியாத காரணத்தால் பிற்போடப்பட்டுள்ளதாக யாழ். அரச அதிபர் க. சண்முகநாதன் அறிவித்துள்ளார்.

(இ-7)


**NEW SCIENCE ACADEMY**

நல்லூர்.

கணக்கீடு – திரு. பாலவாசன்

தொடர் பரீட்சை - 1

13–04–1998 திங்கள் 8–00 — 11-00 A. m.

★ அனுமதிகளை முன் கூட்டியே உறுதிப்படுத்திக் கொள்ளவும்.

குறிப்பு: A/L 98 இல் பரீட்சை எடுக்கும் மாணவர்கள் மட்டுமே அனுமதிக்கப்படுவர்.

(54747)



மீசாலை வடக்கு – வேம்பிராய்

அருள்மிகு

**கலட்டியிற் பிள்ளையார் தேவஸ்தானம்**

வருடாந்த

**அலங்கார உற்சவம்-1998**

உற்சவம் ஆரம்பம்: 08-04-98 புதன்

உற்சவம் பூர்த்தி: 17-04-98 வெள்ளி

உற்சவகால பிரதமகுரு:

"சிவமணி சிவாகம கிரியா ஞானபூபதி"

சிவஸ்ரீ செ. பரமானந்தக் குருக்கள்

கல்வயல்.

அனைவரையும் எம்பெருமான் அருள்பெற்றுய்யுமாறு அன்புடன் வேண்டுகின்றோம்.

-பரிபாலனசபையார்

மீசாலை. (சி/3387)



**'மாகோ' கப்பல் மூலம்**

யாழ்ப்பாணத்திற்குப்

பொருள்களைக் கொண்டு வரும்

**சகலருக்குமான**

**அறிவித்தல்**

பொருள்கள் சேவைகளின் வரி 12.5% அதிகரித்துள்ளமையால், கப்பல் கட்டணமும் 12.5% ஆல் அதிகரித்துள்ளது. ஆகவே கப்பலில் கொண்டு வரப்படும் பொருள்களின் கப்பல் கட்டணம் ஒரு சி. பி. எம். இற்கு ரூபா 4.500/- அறவிடப்படும் என்பதை அறியத் தருகின்றேன்.

கப்பல் மூலம் யாழ்ப்பாணத்திற்குப் பொருள்கள் கொண்டு வரும்

சகலருக்குமான அறிவித்தல்

கப்பலில் பொருள்களைத் தருவிக்கும் பெறுநர்கள் யாவரும் பருத்தித்துறை துறைமுகத்திற்குச் சென்று, பொருள்களைச் சரியாக இனங்கண்டு, பெற்றுக் கொள்ளவும். குறைவிற்கோ அன்றேல் பொருள்கள் பழுதடைவிற்கோ நாம் பொறுப்பாளிகள் அல்ல என்பதையும் தெரிவித்துக் கொள்கின்றேன்.

க. சண்முகநாதன்

யாழ். அரச அதிபர்

(சி/3382)



பல்கலைக்கழக

அனுமதி பெற்ற

மாணவர்களுக்கான

பொது ஆங்கில

மொழிப் பயிற்சிநெறி

GELT -- 1996/97

யாழ்ப்பாணக் குடாநாட்டிலிருந்து இலங்கையின் சகல பல்கலைக்கழகங்களுக்கும் சகல கற்கைநெறிகளுக்கும் 1996 க. பொ. த. உயர்தரப் பரீட்சையின் அடிப்படையில் தெரிவு செய்யப்பட்ட மாணவர்களுக்கான GELT ஆங்கில வகுப்புகள் யாழ்ப்பாணம், சாவகச்சேரி, பருத்தித்துறை, மானிப்பாய் ஆகிய இடங்களில் 20—04—1998 இலிருந்து நடைபெறவுள்ளன. (யாழ்ப்பாணம் – மத்திய கல்லூரி, சாவகச்சேரி–டிறிபேர்க் கல்லூரி, பருத்தித்துறை–ஹாட்லிக் கல்லூரி, மானிப்பாய் – இந்துக் கல்லூரி) இதற்கு முன்னோடியாக 17 — 04 — 1998 வெள்ளிக்கிழமை பிற்பகல் 2. 30 மணிக்கு ஆங்கில தரமதிப்பீட்டுப்பரீட்சை குறிப்பிட்ட நிலையங்களில் நடைபெறவுள்ளது. இப்பரீட்சைக்குத் தவறாது தோற்றுமாறு மாணவர்கள் வேண்டப்படுகின்றார்கள்.

–பதிவாளர்

யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்

(சி/3386)



**NEW SCIENCE HALL**

கன்னாதிட்டி, யாழ்ப்பாணம்.

**தூய/பிரயோககணிதம்**

திரு. வெக்டர்

17 - 04 - 1998 Friday

| | | | | |
|---|---|---|---|---|
| 97 Paper | -- | 8-00 | — | 11-00 |
| 99 | -- | 11-00 | — | 1-00 |
| 98 | -- | 1-00 | — | 3-00 |

குறிப்பு: 99 A/L காலை 08 — 11 வரை Phy., Che. யும் 98 A/L காலை 08 — 01 வரை Che., Phy. உம் 97 Paper காலை 08 Bot. யும் 10 — 01 வரை Zoo., Phy., Che. யும் 2000 A/L காலை 8-00 மணி முதல் வகுப்புக்கள் நடைபெறும்.

(54748)


Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org

# வேலை நிறுத்தத்தை தபால்ஊழியர் கைவிடுவர்?

கொழும்பு, ஏப். 8

வேலை நிறுத்தத்தில் ஈடுபட்டு வந்த தபால் தொழிற் சங்கங்கள் தமது வேலை நிறுத்தத்தை கைவிட முடிவு செய்துள்ளன.

கொழும்பு மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் பெனற் கூரே இந்த விவகாரத்தில் தலையிட்டு மேற்கொண்ட சமரச முயற்சியின் பயனாகவே இது சாத்தியமாகியிருக்கின்றது.

பெனற்கூரே நேற்றுப் பிற்பகல் தபாற் தொலைத் தொடர்புகள் மற்றும் வெகுஜனத்தொடர்பு அமைச்சர் மங்கள சமரவீர, பிரதியமைச்சர் அனுரா பிரியதர்சன யாப்பா ஆகியோரை சந்தித்து தபால் திணைக்கள ஊழியர்களின் கோரிக்கை தொடர்பாக பேச்சு நடத்தினார்.

இதன் பின்னர் பெனற் கூரேயும், அனுரா பிரியதர்சன யாப்பாவும் மக்கலன் வீதியிலுள்ள மத்திய தபால் பரிவர்த்தனை நிலையத்தைச் சேர்ந்த ஊழியர்களை சந்தித்து உரையாடினார்கள்.

இந்த உரையாடலின் போது இன்று முதல் வேலை நிறுத்தத்தைக் கைவிடுவதற்கு ஊழியர்கள் இணக்கம் தெரிவித்தார்கள் என்று தெரிவிக்கப்பட்டது. (இ-8)

## கைதுகள்...

[முதலாம் பக்கத் தொடர்]

படையினருடன் தொடர்பு கொண்டு விவரங்களைத் தெரிவிப்பவர் தம்மிடம் தொலைபேசி இணைப்பு இருந்தால் தமது தொலைபேசி இலக்கத்தையும் தெரிவிக்க முடியும்.

முறைப்பாடு செய்பவருக்கு முறைப்பாடு தொடர்பான இலக்கம் ஒன்று வழங்கப்படும்.

கிடைத்த தகவல்களின் அடிப்படையில் உரிய விசாரணைகள் நடத்தப்பட்டு முறைப்பாட்டுக்காரருக்கு சமீபமாக உள்ளபடைமுகாம் அல்லது பொலீஸ் நிலையம் மூலம் முறைப்பாட்டுக்காரருக்கு தகவல் தெரிவிக்கப்படும். முறைப்பாட்டுக் காரருக்கு தொலைபேசி வசதி இருந்தால் தொலைபேசி மூலம் தகவல் தெரிவிக்கப்படும்.

படையினரால் கைதுசெய்யப்படுவோர் அல்லது, படையினரால் தடுத்து வைக்கப்படுவோர் பற்றிய தகவல்களைஅறிய விரும்பும் பொது மக்களின் வசதி கருதியே மேற்கண்ட நடைமுறைகள் அமுல் செய்யப்படுகின்றன.

கைதுகள் குறித்து முறையிடுவோர் பின்வரும் தகவல்களை தெரிவிக்குமாறு அறிவுறுத்தப்பட்டுள்ளனர்.

★ கைதான நபரின் பெயர்:-

★ கைதான நபரின் விலாசம்:-

★ கைதான திகதிநேரம்:-

★ கைதான இடம்:-

★ கைது குறித்து ரசீது வழங்கப்பட்டிருந்தால் அதன் இலக்கம்:-

★ முறைப்பாடு செய்பவரின் பெயர் விலாசம்:-

★ முறைப்பாடு செய்பவரின் தொலைபேசி இலக்கம்:-

★ வேறு விவரங்கள்:-

— இவ்வாறு அந்தச் செய்திக் குறிப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது. (உ)

# புதுவருட நிகழ்ச்சிகள்

யாழ்ப்பாணம், ஏப். 8

புதுவருடத்தையொட்டி 513 ஆவது படையணியின் ஏற்பாட்டில் விசேட நிகழ்ச்சிகள் நாளை மறுதினம் வெள்ளிக்கிழமை காலை முதல் மாலைவரை மருதனார்மடம் இராமநாதன் கல்லூரி மைதானத்தில் நடைபெற இருக்கின்றன.

அன்று காலை விளையாட்டுப் போட்டிகளும், மாலை கலாசார நிகழ்ச்சிகளும் ஏற்பாடு செய்யப்பட்டுள்ளன என தெரிவிக்கப்பட்டது.

## விமானப் படை...

(முதலாம் பக்கத் தொடர்)

கொடித்துவக்கு நாடாளுமன்றத்தில் தெரிவித்தார்.

அவசர கால சட்டத்தை நீடிக்கும் பிரேரணை மீதான விவாதத்தில் பேசுகையில் அவர் இப்படித் தெரிவித்தார்

''பாதுகாப்புப் படையினர் இவ்வாறு செயற்பட்டு விட்டு, பத்திரிகையாளர்கள் தான் புலிகளுக்கு தகவல் கொடுக்கும் விதமாக செய்திகளை வெளியிடுகிறார்கள் என்று கூறுவது எதுவிதத்தில் நியாயமாகும்?'' என்று கேள்வி எழுப்பினார் கருணசேன கொடித்துவக்கு. (உ-3)

## புலிகள்...

(முதலாம் பக்கத் தொடர்)

மேற்கொள்ளளப்பட்டு வந்த தகவல் பரிமாற்றங்களையடுத்து இன்று முதல் மின் விநியோகம் ஆரம்பிக்கப்படுவதாகத் தெரிவிக்கப்பட்டது.

பட்டிப்பளைப் பிரதேச சபை தலைவர் எஸ். அகிலேஸ்வரன் தலைமையில் மின் விநியோகம் ஆரம்பிப்பது தொடர்பான வைபவம் ஒன்று இன்று அங்கு நடைபெறவிருக்கிறது. (உ-5)

# வாழ்த்துச் செய்தி

கொழும்பு, ஏப். 8

இந்தியப் பாதுகாப்பு அமைச்சராகப் பதவியேற்றுள்ள ஜோர்ஜ் பெர்ணாண்டாஸுக்கு வாழ்த்துத் தெரிவித்து மட்டக்களப்பு மாவட்ட தமிழர் விடுதலைக் கூட்டணி நாடாளுமன்ற உறுப்பினர் ஜோசப் பரராஜசிங்கம் கடிதம் அனுப்பியுள்ளார். (உ-3)

# ஆதீனத்தில் சமய தீட்சை

கொழும்புத்துறை, ஏப். 8

நல்லை திருஞானசம்பந்தர் ஆதீனத்தில் பௌர்ணமி தினந்தோறும் நடைபெற்று வரும் பாடசாலை மாணவர்களுக்கான இலவச சமய தீட்சை தொடரின் ஓர் அங்கமாக எதிர்வரும் சனிக்கிழமை காலை 8-30 மணிக்கு சமய தீட்சை வழங்கும் நிகழ்வு ஆதீனம் குருமகா சந்நிதானம் ஸ்ரீலஸ்ரீ சோமசுந்தர தேசிக ஞானசம்பந்த பரமாசாரிய சுவாமிகள் தலைமையில் நடைபெறும். [இ-30]

## அவசரகால ..

(முதலாம் பக்கத் தொடர்)

அவசரகாலச் சட்ட நீடிப்புக்கு எதிராக வாக்களிப்பதில்லை என்பது குறிப்பிடத்தக்கது.

நேற்று நடந்த விவாதத்தில் தமிழர் கைது தொடர்பாக தமிழர் விடுதலைக் கூட்டணி உறுப்பினர் நீலன் திருச்செல்வம், ஐ. தே. க. உறுப்பினர் டிரோன் பெர்னாண்டோ, இரத்தினபுரி மாவட்ட பொதுமக்கள் ஐக்கிய முன்னணி உறுப்பினர் வாசுதேவ நாணயக்கார, யாழ். மாவட்ட உறுப்பினர் சிவதாசன், வன்னிமாவட்ட உறுப்பினர் எஸ். சண்முகநாதன், இ.தொ.கா. உறுப்பினர் பி.பி. தேவராஜ் ஆகியோர் எதிர்த்துக் குரல் எழுப்பினர். (உ-3)

## பகிஷ்கரிப்பின் ..

(முதலாம் பக்கத் தொடர்)

மளிக்கப்படுவதில்லை.

பத்திரிகைச் சுதந்திரம் பாதிக்கப்படும்நிலை மீண்டும் உருவாகுகிறது. பத்திரிகையாளர்கள் தாக்கப்படுகின்றார்கள்.

சுதந்திரமாகச் செயற்படுவதற்கு, எழுதுவதற்கு அவர்கள் அனுமதிக்கப்படுவதில்லை.

எமது பொதுக்கூட்டங்கள் வன்முறையில் கலைக்கப்படுகின்றன இவற்றை அரசாங்கம் உற்சாகப்படுத்த முனையுமாயின் எமது பகிஷ்கரிப்பு நடவடிக்கைகள் தொடர்ந்து மேற்கொள்ளப்படும் — என்றார் ரணில். (உ-3)

# இப்படியும் நடக்கிறது!

யாழ்ப்பாணம், ஏப். 8

அரசாங்கப் பாடசாலைகளில் தமிழ் மொழி மூல தகுதிகாண் ஆசிரியர்களை நியமிக்கும் திட்டத்தின் கீழ் நியமனம் பெற்று கடந்த மூன்று வாரங்களாக யாழ். இந்து மகளிர் கல்லூரியில் சேவை முன்பயிற்சியில் கலந்துகொண்ட 13 பேரின் நியமனங்கள் நேற்று முன்தினம் திடீரென ரத்துச் செய்யப்பட்டன.

போட்டிப் பரீட்சைக்கு விண்ணப்பிக்கும் போதுமேற்படி விண்ணப்பதாரர்கள் தமது நிரந்தர பிரதேச செயலர் பிரிவுக்குப் பதிலாக வேறொரு பிரதேச செயலர் பிரிவை குறிப்பிட்டமையே நியமனம் ரத்துச் செய்யப்பட்டதுக்கு காரணமெனக் கூறியே மாகாணக் கல்வி அமைச்சின் செயலாளர் இந்த நியமனங்களை ரத்துச் செய்திருக்கின்றார்.

மேற்படி ஆசிரியர் நியமனத்துக்குரிய நேர்முகப்பரீட்சைகள் யாழ். கல்வி வலயம் ஒன்றில் நடைபெற்றபோது வேறு பிரதேச செயலர் பிரிவுகளுக்குமாறி விண்ணப்பித்தவர்களுக்கு நியமனம் வழங்கப்படமாட்டது என்று நேர்முகப் பரீட்சையின் போதே விண்ணப்பதாரருக்குத் தெரிவிக்கப்பட்டிருந்ததாம்.

ஆனால் நேற்று முன்தினம் நியமனம் ரத்துச் செய்யப்பட்ட 13 ஆசிரியர்களும் நேர்முகப் பரீட்சையைத் தாண்டி, தற்காலிக நியமனக் கடிதங்களைப் பெற்று, 3 வாரகால சேவைமுன் பயிற்சியைப் பெற்றவர்கள் என்பது குறிப்பிடத்தக்கது.

திடீரென நியமனம் ரத்துச் செய்யப்பட்டவர்களில் பலர் ஏற்கனவே தாம் புரிந்து வந்த பல்வேறு தொழில்களையும் ராஜினமாச் செய்து விட்டே ஆசிரியர் நியமனத்தைப் பெற்றுக் கொண்டார்கள் எனத் தெரிவிக்கப்பட்டது. தற்போது அவர்களுக்கு இரண்டும் கெட்டான் நிலை ஏற்பட்டுள்ளது.

கல்வி அதிகாரிகள் இழைக்கும் தவறுகள், எத்தனை பேருடைய எண்ணங்களை எவ்வாறெல்லாம் நிராசையாக்குகின்றன என்பதற்கு இதுவும் ஓர் உதாரணம்.

இந்தத் தவறு நேர்முகப் பரீட்சையின் போது கண்டுபிடிக்கப்படாதது ஏன்? நேர்முகப் பரீட்சையின் போது தவறு இழைக்கப்படவில்லை என்றால் இப்போது நியமனத்தை ரத்துச் செய்வது என்ன நியாயம்?—

தண்டிக்கப்பட வேண்டியவர்கள் கல்வி அதிகாரிகளா அல்லது விண்ணப்பதாரர்களா என்ற கேள்வியும் இயல்பாகவே எழுகின்றது—

அதிகாரிகள் தமது விருப்பு வெறுப்புகளைச் சாதிக்க இந்த நியமனங்கள் தான் கிடைத்தனவா—என்று பொது மக்கள் பெற்றோர்கள் மத்தியில் கேள்விகள் எழுப்பப்படுகின்றன. (அ-7)

## உள்நாட்டு

# தொலைபேசி அழைப்பு கட்டணம் ஏதுமின்றி!

## 13, 14 ஆம் திகதிகளில்

கொழும்பு, ஏப். 8

புதுவருடத்தையொட்டி எதிர்வரும் 13, ஆம் 14 ஆம் திகதிகளில் ரெலிகொம் நிறுவன சேவையில் பயன்படுத்தப்படும் சகல உள்நாட்டுத் தொலைபேசி அழைப்புக்களுக்கும் கட்டணம் அறவிடுவதில்லை என்று முடிவுசெய்யப்பட்டுள்ளது.

ரெலிகொம் நிறுவன பிரதம நிறைவேற்று அதிகாரி ஹிடோக்கி மேற்கண்ட தகவலைத் தெரிவித்தார்.

உள்நாட்டு அழைப்புக்களுக்கு மட்டுமே இந்த சலுகை வழங்கப்பட்டுள்ளது என்றும்—

அதேசமயம் வெளிநாட்டுத் தொலைபேசி சேவையைப்பயன்படுத்துவோருக்கு சலுகை வழங்கப்படும் என்றும் – அவர் தெரிவித்தார்.

வெளிநாட்டுச் சேவையில் தொடர்ச்சியாக 30 நிமிடங்கள்பேசினால்10நிமிடங்களுக்கும் 45 நிமிடங்கள் பேசினால் 15 நிமிடங்களுக்கும் கட்டணம் அறவிடப் படும் என்றும் அவர் தெரிவித்தார்

யாழ்ப்பாணத்தில் இயங்கும் தொலைபேசிகளுக்கும் உள்நாட்டு அழைப்புகளுக்கு 13, 14 ஆம் திகதிகளில் கட்டணம் அறவிடப்படமாட்டாது என பிராந்திய தொலைத்தொடர்பு பொறியியலாளர் எஸ். பாலசுப்பிரமணியம் உதயனுக்குத் தெரிவித்தார். (உ-3)

# கல்வி உபகரணம் அன்பளிப்பு

வட்டுக்கோட்டை இந்து வாலிபர் சங்கம் வசதி குறைந்த மாணவர்களின் கல்வியை ஊக்குவிக்கும் நோக்குடன் வட்டுக்கோட்டை திருஞான சம்பந்தர் வித்தியாசாலைக்கு ஆறாயிரம் ரூபா பெறுமதியான கல்வி உபகரணங்களை வழங்கியுள்ளது.

# யாழ்ப்பாண கல்லூரி ஆசிரியருக்கு

வலி. தென்மேற்கு, ஏப். 8

வட்டுக்கோட்டை, யாழ். பாணக் கல்லூரி ஆசிரியர்கள் அனைவரையும் நாளை வியாழக்கிழமை காலை 10,30 மணிக்கு கல்லூரியில் சமுகமளிக்குமாறு பிரதி அதிபர் வண. பிதா ஏ. ஏ. போல் கேட்டுள்ளார். (இ-185)

# விபத்தில் சிறுவன் காயம்

யாழ்ப்பாணம், ஏப். 7

மட்டுவில் பன்றித்தலைச்சி அம்மன் கோயில், பங்குனித் திங்கள் பொங்கல் உற்சவத்திற்கு சென்று விட்டுத் திரும்பிய 5 வயதுச்சிறுவன் ஒருவன் வாகன விபத்தில்காயமடைந்தார்.

கோயிலில் இருந்து திரும்பி வீட்டுக்கு முன்னால், காரில் இருந்து இறங்கிய போது நாயொன்று கடிக்கமுற்பட்ட வேளை பீதியடைந்த அச் சிறுவன் வீதியின் குறுக்காக ஓடியபோது வீதியில் வந்த வாகனத்துடன் மோதி விபத்து ஏற்பட்டதாகத் தெரிவிக்கப்பட்டது.

நல்லூர்முடமாவடியில் திங்களன்று இடம்பெற்ற இச்சம்பவத்தில் அதேயிடத்தைச் சேர்ந்த விசாகரட்ணம் சிவதர்சன் (வயது 5) என்ற சிறுவனே காயமடைந்தவராவார். இவர் யாழ். ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டுள்ளார். (ஐ5-13-9)

மலிவு விற்பனை! மலிவு விற்பனை!

யாழ். 'சீமாட்டி'யின் புத்தாண்டு

★ மலிவு விற்பனை ★

மலரும் புத்தாண்டை முன்னிட்டு பிரத்தியேகமாக இறக்குமதி செய்யப்பட்ட

புத்தம் புதிய தரம்மிக்க வர்ண வர்ண ஜவுளித்தினுசுகள்

அனைத்தும் 10% முதல் 30% வரை கழிவு விலையில் விற்பனையாகிக் கொண்டிருக்கின்றன!

இந்தச் சலுகை மார்ச் 30 தொடக்கம் ஏப்ரல் 14 வரையே

உங்கள் தெரிவுக்கு முந்துங்கள்!

சீமாட்டி [ஜவுளி சமுத்திரம்]

122, மின்சார நிலைய வீதி, யாழ்ப்பாணம்.

மங்கை சில்க் 15, நவீன சந்தை, யாழ்ப்பாணம்.

மங்கை சில்க் 8, நவீன சந்தை, சுன்னாகம்.

[ப]/3347

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

இப்பத்திரிகை நியூ உதயன் பப்ளிக்கேஷன் (பிறைவேற்)லிமிட்டெட் நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதி, 361 ஆம் இலக்கத்திலுள்ள அவர்களது பணிமனையில், 8 -04-1998 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.